# வெள்ளிமலை

## இதழ் 18(2023)




வலிகாமம் தெற்கு பிரதேச சபை
பொது நூலகம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிமலை

*இதழ் 18 (2023)*



வலிகாமம் தெற்கு பிரதேச சபை,

பொது நூலகம்,

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிமலை

## *இதழ் 18 (2023)*

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,

பொது நூலகம்,

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வெள்ளிமலை | : | ஆண்டிதழ் 2023 |
| வெளியீடு | : | வலிகாமம் தெற்கு பிரதேச சபை,<br>பொது நூலகம்,<br>சுன்னாகம். |
| பதிப்பு | : | 1வது பதிப்பு 2023 |
| பதிப்பாசிரியர் | : | திருமதி சுதர்சன் ஜெயலக்சுமி<br>பிரதம நூலகர் |
| பக்கங்கள் | : | IV + 78 |
| பிரதிகள் | : | 100 |
| அச்சிட்டோர் | : | அஸ்வின் பிறிண்டேர்ஸ்<br>இணுவில் மேற்கு, இணுவில் |
| பதிப்புரிமை | : | இம்மலருக்கான பதிப்புரிமை வலிதெற்கு பிரதேச சபைக்குரியது. இதிலுள்ள ஆக்கங்களுக்கான பதிப்புரிமை அவற்றின் ஆக்கியோருக்குரியது. |

| | | |
|---|---|---|
| Vellimalai | : | Annual Issue 2023 |
| Publishers | : | Valikamam South Pradeshiya Saba<br>Public Library<br>Chunnakam |
| Edition | : | 1st Edition 2023 |
| Editor | : | Mrs. Sutharsan Jeyaluxmy<br>Chief Librarian |
| Pages | : | IV + 78 |
| No.of copies | : | 100 |
| Printers | : | Ashwin Printers<br>Inuvil West Inuvil<br>Tel : 0776458437 |
| Copy Rights | : | Copy Rights of this Publication belongs to the Valikamam South PradeshiyaSabha Copy Rights for the individual articales belong to the respective contributors. |

ISSN 2989 - 0063



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

வெள்ளிமலையின் 18 ஆவது இதழ் சிறப்பு கட்டுரைகளுடன் வெளிவருவது இட்டு பெருமகிழ்வு அடைகின்றோம். இன்றைய வாசிப்பு பழக்கம் அருகிவருகின்றது என்ற ஓர் கருத்துநிலையை மாற்றியமைக்கும் வகையிலும் எமது பிரதேச வரலாறுகளையும் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தும் முகமாக இச்சஞ்சிகையை வெளியிட்டிருக்கின்றோம்.

எமது நூலகமானது தொடர்ந்தும் வாசிப்பு செயற்பாடுகளிலும், தற்கால நவீன தொழினுட்ப வளர்ச்சிக்கேற்ப நூலகங்களின் செயற்பாடுகளை தன்னியமாக்கும் செயற்பாடுகளையும் காலத்தின் தேவை கருதி விஸ்தரித்துள்ளது. மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்த டிஜிட்டல் அறிவு மையத்தினூடாக பலவித செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். சிறார்கள் முதல் முதியவர்கள் வரை எமது நூலகத்தினை பயன்படுத்தி பயனடைகின்றனர். தொடர்ந்தும் தற்கால தேவையறிந்து வாசகர்களுக்கு சேவைபுரிய உள்ளோம். எமது சேவைகள் சிறப்பாக அமைய ஆதரவும் பங்களிப்பும், ஆலோசனையும் வழங்கிவரும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இச் சஞ்சிகை வெளிவர நிதி பங்கிப்பினை வழங்கிய திரு செ.பாஸ்கரன் (அமெரிக்கா) அவர்களுக்கும் ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த அஸ்வின் பதிப்பகத்தினருக்கும் நன்றிகள். மீண்டும் அடுத்த சஞ்சிகையுடன் சந்திப்போம்.

நன்றி

**பொது நூலகம்**
**சுன்னாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| இல | விடயங்கள் | பக்கங்கள் |
|---|---|---|
| 01. | உலகம் வாசிப்பவருக்கே சொந்தம் | 01 - 02 |
| 02. | மாணவர் திறன் விருத்தியில் பாடசாலை நூலக கற்றல்வள நிலையத்தின் பங்கு | 03 - 07 |
| 03. | அக ஒளியில் | 08 - 09 |
| 04. | பெற்றோரே சிந்தியுங்கள் | 10 - 13 |
| 05. | நூலகம் பரிபூரணம் | 14 |
| 06. | சுன்னாகம் மண்தந்த இலக்கியக் களஞ்சியம் கவிஞர் சு.துரைசிங்கம் ஐயா அவர்கள். | 15 - 18 |
| 07. | யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களும் அவற்றின் நூலக நடவடிக்கைகளும் | 19 - 26 |
| 08. | இன்றைய வாழ்வில் பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களும் பிள்ளைகளின் போக்குகளும் | 27 - 30 |
| 09. | சி.வை.தா.வின் பெயர் சொல்லும் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரனார் (B.A.) (இலங்கைப் பல்கலைக்கழக (கல்லூரி) முதல் தமிழ் விரிவுரையாளர்) | 31 - 40 |
| 10. | யாழ்ப்பாணப் பண்பாட்டில் வீதியோர மடங்கள் | 41 - 45 |
| 11. | ஞாபக உத்திகள் | 46 - 48 |
| 12. | சுன்னாகம் பொதுநூலக டிஜிட்டல் அறிவுமையம் ஒரு கண்ணோட்டம் | 49 - 51 |
| 13. | உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது | 52 - 53 |
| 14. | யாழ்ப்பாணத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் வலிகாமம் தெற்கு பிரதேசம் சார்ந்த சில பதிவுகள். | 54 - 62 |
| 15. | சிறுதானியங்களும் அவற்றின் பயன்பாடும் | 63 - 75 |
| 16. | சினத்தைத் தவிர்ப்போம் | 76 - 78 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் வாசிப்பவருக்கே சொந்தம்

கல்லோடு கல்லுரசிக் கூத்தாடிக் களித்தோம்
சொல்லோடு சொல்லுரசிக் கவிதைகள் படைத்தோம்
வில்லோடு அம்புரசி வெற்றிகள் குவித்தோம்
நூலோடு கண்ணுரசி காவியம் விதித்தோம்

திரும்பிடும் திசையெங்கும் செங்கொடி கண்டோம்
தில்லையர் நாமென்று திக்கெட்டும் பகர்ந்தோம்
தமிழனால் இறப்பினும் தமிழனால் வாழ்ந்தோம்
வாசிப்பை நேசித்தே வினையும் அளந்தோம்

வித்தகர் வரலாற்றை விதைத்தனன் நூலில்
வக்கிர வாலிபர் இணையத்தின் கையில்
வம்சங்கள் அழியுது பேதைமைத் தீயில்
பெற்றவர் சொல்மறுத்து நிற்கிறார் வீதியில்

அகோரமே விகாரமாய் உருவெடுத்த கலியுகம்
இன்பத்தைப் புரிந்திட மறுப்பதே அதன்குணம்
தடைகளை தகர்த்து நீ தனித்துவம் செதுக்கனும்
அதற்கு நான் சொல்வதை கவனமாய்க் கேக்கனும்

போதைக்காய் யாசித்துச் சுவாசிக்கும் பிணங்களே
கைபேசி முகத்திலே சுயமுகம் தொலைபோரே
எத்தகையதெம் பலம் என்றுணர வேண்டும்
அத்தகையதைத் தாண்டி சிறகடிக்க வேண்டும்


அரசியல் அறிவியல் ஆயகலைகளாம்
அத்தனை துறைகளும் வாசித்து அறியலாம்
வாசிப்பை சுவாசித்தால் வல்லமை பெருக்கலாம்
வாழ்வென்ற பாதையின் அர்த்தத்தை புசிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசி வாசி எல்லாமே வாசி
சுவாசித்த வாசிப்பில் தீதைத் தூக்கி வீசி
யோசி வாழ்வது வளம்பெற யோசி
அதற்காய் முதற்கண் நன்றே வாசி

ஏனெனில் உலகம் வாசிப்பவர்க்கே சொந்தம்.

அ.சாருஜன்
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி





சிறுவர் தினத்தினை சிறார்கள் எமது நூலகத்தில் கொண்டாடி மகிழ்ந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் திறன் விருத்தியில் பாடசாலை நூலக கற்றல்வள நிலையத்தின் பங்கு

எதிர்கால சந்ததிகளை நல்ல நிலையில் வளர்த்தெடுப்பதற்கும் ஆளுமைத்திறன் கொண்ட மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பாடசாலைகள் நிலைக்களனாக அமைகின்றன. அத்தகைய மாணவர்களை உருவாக்குவதற்கு பாடசாலைகளில் பல்வேறு பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தன்மையினை காணலாம். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்றதாக வகுப்பறைக்கு மேலதிகமாக பாடசாலைகளில் காணப்படுகின்ற இணைபாடவிதான செயற்பாடுகளுடன் கூடிய பல்வேறு துறைகளில் பாடசாலை நூலகம் தனிஇடத்தை பெறுகின்றது. அத்தகைய பாடசாலை நூலகங்கள் மற்றும் கற்றல் வள நிலையங்களை விளைதிறனுடன் கூடிய உயர்வினைத்திறனுடன் செயற்படுத்துவது முக்கியமானதாகும்.

"பாடசாலை நூலகம்" என்ற எண்ணக்கருவானது இன்று நூலகமும் கற்றல்வள நிலையமும் Library and learning resource centre (LLRC) என மாற்றம் பெற்றுள்ளது. பாடசாலை சமூகத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இடைவேளை நேரத்தினை அர்த்தமுள்ளதாக பயன்படுத்துவதற்கும் தேவையான தகவல்களையும் அறிவினையும் வழங்குகின்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஒரு அலகையே நூலகமும் கற்றல்வள நிலையமும் எனப்படுகின்றது.

"வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்குகின்றது" என்ற கருத்திற்கமைவாக பாடசாலை நூலக மற்றும் கற்றல் வள நிலையங்களை மையமாக கொண்டு பிள்ளைகளின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்காகவும் பாடசாலை நூலகங்கள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்படுவது முக்கியமானதொன்றாகும். பாடசாலை நூலகம் சிறப்பாக செயற்படுகின்றபோது அங்கு கற்கும் மாணவர்களது அறிவும் திறனும் மேம்பட்டதாகவே காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு என்பது எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட வாக்கியத்திலுள்ள சொற்களை இனங்கண்டு அதில் கூறப்பட்டிருக்கும் பொருளை விளங்கிக்கொள்வதாகும். சோற்களை இனம்காணல் மற்றும் பொருளை விளங்கிக்கொள்ளல் ஆகியன வாசிப்பின் இரு பிரதான செயன்முறைகள் என்று குறிப்பிடப்படுகின்றன.

மிக ஆரம்பத்திலிருந்தே பிள்ளைகளுக்கு நன்றாக வாசிப்பதற்கு கற்றுக்கொடுப்பதனால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதாவது மிக ஆரம்பத்திலேயே தமது மொழியின் கட்டமைப்பை நன்கு விளங்கிக்கொள்ளவும் சொற்களஞ்சிய விருத்திக்கும் ஆக்கத்திறன் விருத்திக்கும் வாசிப்புக் கற்பித்தல் உதவியாக இருக்கும். இதன் பலனாக மாணவர்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் ஏனைய பாடங்களையும் நன்கு கற்பதுடன் சிறப்பான பெறுபேறுகளை பெறுவதற்கும் ஏதுவாக அமைகின்றது. அதுமட்டுமன்றி சிறந்த வாசிப்புதிறன் கொண்ட மாணவர்களின் மொழியறிவு சிறப்பாக விருத்தியடைவதனால் பிழையின்றி வாக்கியங்களை எழுதவும் சரியான இலக்கணத்தை பயன்படுத்தி வாக்கியம் எழுதும் திறமையும் அவர்களிடத்தில் உருவாகும். அதனால் அவர்கள் வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடல்களில் நன்கு திறமை காட்டுவார்கள்.

மாணவர்கள் தமது மூளையின் இடது அரைப்பகுதியை உள்ளடக்கும் பாடவிடய அறிவை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையிலேயே இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் தற்போது நிலவும் பரீட்சைகளை மையப்படுத்திய கற்கை கலாசாரத்தின் அம்சம் காணப்படுகின்றது. மூளையின் வலது அரைப்பகுதி தொடர்பாக இரசனைத்துறை அல்லது ஓர் மனிதனாக சமூகத்தில் வாழ்வதற்கு அவசியமான நெறிமுறைகள், விழுமியங்கள், ரிதம், அழகுணர்ச்சி, அன்பு, பாசம், கருணை போன்ற துறைகளின் அபிவிருத்திக்காக மாணவர்களுக்கு உரித்தான வாய்ப்புகள் தொடர்ந்தும் மிக்ககுறைந்த மட்டத்திலேயே இருந்து வருவதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக்கருத்திற்கொண்டு சமநிலை கொண்ட மாணவர்களை உருவாக்கக்கூடிய வகையில் மூளையின் இடது அரைப்பகுதிக்கான எண்ணக்கருக்களால் அபிவிருத்தியடைந்தவாறு மூளையின் வலது அரைப்பகுதியும் அபிவிருத்தியடைந்த எண்ணக்கருக்களை கொண்ட நிலையில் உருவாக்கப்படவேண்டியது அவசியமானதாகும். இதனை மையமாகக் கொண்டே பாடசாலை நூலக கற்றல் வளநிலையங்கள் உருவாக்கப்பட்டிருப்பதுடன் அத்தகைய வளத்தைப் பயன்படுத்தி சிறந்த அறிவாற்றல் மிக்க நற்பிரஜையாக ஒரு மாணவனை வளர்த்தெடுப்பதில் நூலக கற்றல் வள நிலையங்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

மாணவர்கள் வாசிப்புத்திறன் விருத்தியினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நூலகங்கள் மிகச்சிறந்த வகையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். வுாசிப்பதற்கேற்ற நூல்களை தெரிவு செய்யம் போது புத்தகங்களின் பொருத்தப்பாடு, பல்வகைமை, புத்தகங்களின் தரம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளமை என்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். நூலக கற்றல் வளநிலையத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற ஆசிரிய நூலகர் அல்லது நூலக பொறுப்பாசிரியர் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தும்போது மாணவர்களின் செயற்பாடுகளில் சிறந்த மாற்றங்களை அவதானிக்கமுடியும். பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மேம்பாட்டிற்கு நூலகத்தில் காணப்படுகின்ற அபௌதீக மூலதன மற்றும் மனித வளங்களை பயன்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது முக்கிய பொறுப்பாகும்.

நூலக கற்றல் வள நிலையங்கள் பல சிறப்பான நோக்கங்களை கொண்டிருப்பது மிக அவசியமானதாகும்.

- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்கு ஒத்துழைத்தல்
- பாடத்திட்டத்தினை கற்பதற்கு தேவையான அடிப்படைத்திறனை உருவாக்கும் பொருட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பரந்தளவில் பங்களிப்பு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுய கற்றல் பழக்கங்களை ஏற்படுத்தி ஆசிரியர்கள் இல்லாமலும் அறிவைத்தேடி செல்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- அதற்குத் தேவையான வாசிப்புத்திறன், தகவல் திறன் மேம்பாடு மற்றும் கற்றலுக்கான கற்றல் திறன்விருத்தி என்பவற்றிற்கு உதவிகளை வழங்குதல். அதற்குத் தேவையான புதிய தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகித்தல்.
- படைப்பாக்கங்களை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- விரிவான கற்றல் செயற்பாடுகளுக்காக வாய்ப்புக்களை வழங்குதல்.
- வாசிப்பு இரசனையினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கவர்ச்சிகரமானதும், காலத்திற்குத் தேவையானதும், பாடசாலைக்கு மிகவும் பொருத்தமானதுமான பல்வேறு துறைகளின் கூட்டொன்றினைப் பராமரித்துச் செல்லல்.
- அறிவைத்தேடுதல், அறிவுப் பயன்பாடு, அறிவை மீள் உருவாக்குதல் போன்றவற்றிற்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் "அறிவுச் சமூகத்திற்கு" பிள்ளைகளைப் பழக்கப்படுத்துதல்.
- மாணவர்களின் ஆய்வுகள், பகுப்பாய்வுகள், தொகுப்புக்கள் மற்றும் மதிப்பீட்டு ஆற்றல்களின் விருத்திக்கு உதவுதல்.
- நவீன தொலைத்தொடர்பு தகவல் தொழில் நுட்பங்களின் பாவனைக்கு ஆசிரியர்கள் மாணவர்களாகிய இரு குழுவினரையும் ஈடுபடச் செய்தல்.
- ஆர்வத்தினைத் தீர்ப்பதற்கு வாசிக்கப் பழக்குதல்.
- ஓய்வு நேரத்தினைப் பயனுள்ளதாகக் கழிப்பதற்கு ஊக்குவித்தல்.
- ஆசிரியருக்கும் - ஆசிரிய நூலகருக்குமிடையில் தொடர்பினை வலுவூட்டுதல்.
- வாழ்வதற்காக கற்றுக்கொள்ளும் பொருட்டு பழக்கப்படுத்துதல்.

இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை நூலக கற்றல் வள நிலையங்கள் அதனை நிறைவேற்றக்கூடிய வகையில் செயற்படுகின்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடசாலையில் கற்கும் மாணவர்கள் விளைதிறனுடன் கூடிய உயர் வினைத்திறன் கொண்டவர்களாக மாற்றம் பெறக்கூடிய நிலை உருவாவது திண்ணமாகும்.

மாணவர்கள் அனைவரும் சமநிலையான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையிலும், தம்மை கல்வியினூடாகப் புதிய சமூகத்திற்குத் தகுதியான பல்துறை சார்ந்த நோக்கங்களை அடையக்கூடிய வகையிலும், மாற்றக் கூடியவர்களாகவும், ஆக்கத்திறனுடைய தொடர்பாடல் ஆற்றல்கள்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் நவீன மனப்பாங்குகளை தனதாக்கிக் கொண்ட முயற்சியாளர்கள், மற்றும் உன்னத தலைவர்களாக மாற்றம் பெறுவதற்கும் பொருத்தமான இலக்குகளுடன் நவீன அறிவுமிக்க படைப்பாக்கத்திறன் கொண்ட சிற்பிகளாக மிளிர்வதற்கும் பாடசாலை நூலக கற்றல்வள நிலையங்கள் மறுக்கமுடியாத பங்காற்றுகின்றன. அத்தகைய நூலகங்களை சிறந்த வகையில் உருவாக்கிக் கொள்வதற்கும் அதிக பயன்பாட்டிற்கு உரியதாக அதனை மாற்றியமைப்பதிலும் பாடசாலைகள் கூடிய பங்கெடுத்து செயற்படுவதன் ஊடாக எதிர்காலத்தில் உன்னதமான சிறந்த ஆளுமை மிக்க மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**திரு.மா.தேவகாந்தன்,**
ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்,சித்திரம்),
வலய நூலக இணைப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக ஒளியில்

மோன நிலை கொண்டு
தவயோகத்தில் நிறைந்திட்ட
ஆத்ம விழிப்பொன்றில்
புறஒலி ஒடுங்கிட....
அகஒளி துலங்கிட....
எத்தனை எத்தனை.....
அதிசயம் அறிகிறேன்...

நத்தை நகரும் ஓசை ஒன்றை
அத்தனை நுட்பமாய் கேட்கின்றேன்....

வனமூங்கிலின் எக்கிளை புல்லாங்குழல் என
இனம் கண்டு ஆய்கின்றேன்....

வாடைக் காற்றில் மேனி கிழிந்த
வாழை இலையின்
அழுகைமொழி உணர்கின்றேன்....

பகல்பொழுது என்றபோதும்
பால் நிலாவின் இருப்பை
வான்வெளியில் காண்கின்றேன்...

இணைக்காகவா... இரைக்காகவா....
இசைக்கும் குயிலின் ராகத்தை
ரகம் பிரித்து ரசிக்கின்றேன்...

தவறி உதிர்ந்த மொட்டுக்காய்
கதறி துடிக்கும் பசுங்கொடி ஒன்றின்
தாவரவலி கண்டு துடிக்கின்றேன்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடி நழுவி பாய்ந்தோடிய
மீன் ஒன்றின் நீர்த்தடம்
நினைவில் நிறுத்துகின்றேன்...

என்னை என்முன்னே நிறுத்தி
ஆத்மஞானம் தெளிகின்றேன்...
அகம் ஒளிர்விட யாவும் துலங்கிடும்

**இணுவிலான் சிகாகோ பாஸ்கர்**
அமெரிக்கா





எங்கட புத்தகங்களின் கண்காட்சியும் விற்பனையும்
13,14,15 - 10.2023 (3) நாட்கள்
நடைபெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரே சிந்தியுங்கள்

"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃது
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"

என்ற பொய்யாமொழிப்புலவரின் பொய்க்காத ஈரடிகள். கணவனும் மனைவியும் கரம் கோர்த்து அறம் சார்ந்து பண்பாடு சார்ந்து இருவரும் கற்புநெறி தவறாது வாழ்வது இல்வாழ்க்கை ஆகும். அடுத்தவரின் நகைப்புக்கு இடமின்றி ஒருவரில் ஒருவர் தங்கி மாயும் வரை வாழ்தலே சிறப்பாகும் என்று இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவர் சொல்லிச் சென்றுவிட்டார்.

இன்று எங்கள் குடும்பங்களில் கணவன் மனைவி உறவு சிந்தனைக்கு அப்பாற்பட்டு இயங்குகிறது. உலகில் எந்த மொழியிலும் இல்லாத குடும்ப உறவு எமக்கு மட்டுமே சொந்தமானது. அழகான, அன்பான, பண்பான குடும்ப அமைப்புகளில் வாழ்ந்த நாம் அவலங்களோடும் கண்ணீரோடும் பயணிக்கிறோம். குடும்பம் என்கிற படகு ஆடி அசைந்து எந்த நேரமும் தன்னிலை இழக்கும் தன்மையோடு உள்ளமையை நாம் கண்டும் கேட்டும் வாழ்கிறோம்.

காலம் காலமாக நாம் காத்த அறம் எங்கே? தர்மம் எங்கே? ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர் பண்பாடு எங்கே? பெற்றோர் என்னும் நிழல் தரும் விருட்சத்தில் இளைப்பாறிய குழந்தைகள் எங்கே? ஒரு விசை சிந்திப்போமா? கண்ணீர் எம் வாழ்வியலை நனைத்துப் போடுவதை உணரமுடியும் அல்லவா? குடும்பங்களின் தளம்பல் இன்று பிள்ளைகள் வாழ்வில் ஏற்படுத்திய பாரிய தாக்கத்தை உணர மறுக்கிறோம். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் கணியன்பூங்குன்றனாரின் உயிர்மை வரிகள் நாம் குற்றவாளிகள் என்பதை தினம் தினம் இடித்துரைத்து நிற்கின்றன.

குடும்பம் என்னும் அமைப்பில் குழந்தைகள் என்கின்ற உயிர்கள் பெற்றோரால் உயிருருவாக்கம் பெறுகிறார்கள். மகிழ்ந்திருந்து பெற்ற குழந்தைகளை மகிழ்வான சூழலில் வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கவேண்டியது ஒவ்வொரு பெற்றோரதும் தலையாய கடமையாகும். இந்த கடமையை உணராதவர்கள் குழந்தையை பிரசவிப்பதை நிறுத்த வேண்டும். பிள்ளைகள் பெற்றோரில் தங்கி வாழும் ஒட்டுண்ணிகள். தமது தேவைகளை பெற்றோரிடமிருந்தே நிறைவு செய்கிறார்கள்.

பிள்ளைகளுக்கு பெற்றோர் சிறந்த வழிகாட்டிகளாக, முன்மாதிரிகளாக, ஆசிரியர்களாக, மனநல மருத்துவர்களாக எல்லாவற்றையும் விட சிறந்த நட்புறவாக நெருங்கிவாழ வேண்டும். தலையை தடவிக்கொடுக்கின்ற தாய்மையோடு பெற்றோர் அருகிருந்து பயணிக்க வேண்டும். பெற்றோரின் உலகம் தாம் பெற்ற குழந்தைகள் மட்டுமே அதே போல் அவர்களது சொத்தும் குழந்தைகளே. ஆனால் பிள்ளைகளின் உலகம் பெற்றோர் அல்ல இன்றைய குழந்தைகள் முன் அறிவியல் உலகம் பரந்து விரிந்து கிடக்கின்றது. இதில் அவர்கள் விழுந்து மாய்ந்து விடாது பெற்றோர் தமது மடியில் இட்டுத் தாலாட்டித் தூங்க வைக்க வேண்டும்.

பிள்ளை வளர்ப்பு ஒருகலை. முதலில் பெற்றோர் இந்தக் கலையைக் கற்க வேண்டும். இன்று பிள்ளைகள் உலகம் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. சமூகம் பல உடல் உள நெருக்கடிகளை கொடுத்துக்கொண்டே இருக்கிறது. மனஅழுத்தம் சிறுவர்களுக்கான பாரியநோயாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதனால் மனஉடைவுகளோடு மௌனித்துப் பயனிக்கும் அவர்கள் தற்கொலைக்குள் தஞ்சமாகின்றனர். உயிரிழப்பு ஈடு செய்யமுடியுமா? ஏன்இந்த நிலை என்று ஆய்வுக்குட்படுத்தினால் பெற்றோர் வெகுதூரத்தில் நிற்கிறார்கள் என்பதே உண்மையாகிறது. நாம் செய்யும் தவறுகளுக்கு பிள்ளைகள் தண்டனை பெறுவதா? சிந்திக்க வேண்டும்.

மனிதம் குடும்பங்களில் அன்பினால் விதைக்கப்பட வேண்டும். அன்பு ஒன்றே உள்ளத்தை ஆற்றுப்படுத்தும் ஔடதம். சமூகத்தின் பொருத்தப்பாடுடைய மனிதர்கள் குடும்பங்களில் இருந்தே உருவாக்கம் பெறுகிறார்கள். உருவாக்கம் செய்யவேண்டியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரே. கல்வி ஒவ்வொரு பிள்ளையின் அடிப்படை உரிமை. ஆனால் கல்வியை விட பெற்றவர்களின் உயிர் முக்கியமானது. இங்குதான் நாம் பெரும் தவறு செய்கிறோம். வரட்டு கௌரவத்தோடு கல்விக்காக பிள்ளைகளைத் துரத்துகிறோம். அவர்களது பாதையில் ஏற்படும் துன்ப துயர்களையோ கல் முள்ளையோ கருத்தில் கொள்வதில்லை. கற்காத பெற்றோரும் கல்விக்காகப் குழந்தைகளை சாறு பிழிகிறார்கள்.

"மாலை முழுதும் விளையாட்டு" என்று பாடிய பாரதியின் வரிகள் பொய்த்து விட்டன. விளையாடி மகிழப் பெற்றோர் தடைக்கற்களாக உள்ளமை சிறுவருக்கு சாபக்கேடாக உள்ளமை கண்கூடு. பெற்றோர் கையடக்கத் தொலைபேசியிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் காலத்தை கழிக்கும் இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகள் தமது குழந்தை பருவத்தை எட்டியே கடக்கும் பரிதாப நிலையே எஞ்சியுள்ளது.

எமது நாட்டில் எமது பிரதேசத்தில் மாணவர் சமூகம் கொண்டுள்ள பிரச்சினைகள் பாரதூரமானவை. கஸ்டப்பட்டு படித்துப்பட்டம் பெற்று மறுநாள் தூக்கில் உயிரை மாய்க்கிறார்களே ஏன்? என்பது எமக்கு சாவுமணி. போதையின் பரம்பல் மாணவரை நோக்கியே நகர்ந்துள்ளது. ஆட்டம் கண்டுவிட்ட மாணவ சமூகம் மயக்கத்தில் அல்லலுறுவது தவிர்க்கமுடியாதுள்ளது. மரணஓலங்கள் காதில் ஒலித்த வண்ணமே உள்ளன.

பெற்றோரின் அசமந்தப்போக்கு, குடும்பங்களில் உறைந்துள்ள புரிதல் இல்லாப் பிரச்சினைகள், வரட்டுக் கௌரவம், போதையின் அரவணைப்பு, தப்பான வழிநடத்தல், என்பன எல்லாம் இன்று தாராளமாய் அரங்கேற வஞ்சமில்லாப் பிஞ்சுகள் வாழ்வியலில் கண்ணீர் வடிப்பது துரதிஷ்டமே பெற்றோர் எப்போதும் நேராக இருக்க வேண்டும். அப்போது தான் அழகிய மலர்கள் நறுமணத்தோடு பூத்துக் குலுங்கும். இங்கு பெற்றோரா பிள்ளைகளா? என்ற நிலையே உருவாகியுள்ளது. இந்நிலை முற்றாக தவிர்க்கப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களில் அறம் சார்ந்த மரபு சார்ந்த கருத்துக்களை விதையுங்கள். நற்செயல்கள் மூலம் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக மாறுங்கள் நலிந்து மெலிந்து உருவழிக்கும் எம் அழகிய சமூகத்தை அறிவாலும் ஒழுக்கத்தாலும் கட்டியெழுப்ப பெற்றோரே பெற்றோராக வாழுங்கள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" அல்லவா!

புரிந்து நடந்து சமூகத்தை செதுக்க உங்களால் இயன்ற அர்ப்பணிப்பை உங்கள் குழந்தைகள் வாழ்வில் செய்யுங்கள்.

தவறின் நாம் வாழும் காலத்திலேயே அடுத்த சந்ததியின் இளவயது மரணங்களை காண்கின்ற பொறுப்பற்ற பெற்றோராக எம்மை நாம் அவமானப்படுத்துவோம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனக்கும் உங்களுக்கும் சமூகத்தின் வளர்ச்சியில் மிகப்பெரிய பங்குண்டு. மந்தகதியில் இயங்கமுடியாது. வாழ்வியல் நுணுக்கங்களை தெய்வப்புலவன் மிகஅழகாகச் சொல்லிச்சென்று விட்டுள்ளார்.

ஆக பெற்றோரே உங்கள் பிள்ளைகளின் நலன் கருதி அவர்கள் வாழ்வியலில் அவர்களோடு அவர்களாக மாறுங்கள். அதீத கவனம் செலுத்ததுங்கள். அன்பால் அரவணையுங்கள். தலை தடவி நெஞ்சம் தாங்குங்கள். உங்கள் கைகளில் சமூகம் என்கின்ற உண்மையைப் பிள்ளைகளுக்கு உணர வையுங்கள். குடும்பங்களில் குதூகலத்தை தக்க வையுங்கள். தயாரா பெற்றோரே.........

**உடுவிலூர் கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் பரிபூரணம்

தொலைபேசி நூலகமானது
நூலகம் தனிமையானது
நூல்கள் பதிவேற்றப்பட்டன
தாள்கள் காலாவதியாகின

திரண்டுவரும் சந்தேகங்கள்
திரண்டு வரும் பதில்கள்
திறன்பேசிகளால் வந்தது
வாசிப்புத் திறன் அற்றுப்போனது

அவசரத்தகவல்கள் அவசரமாய்
இற்றைப்படுத்தியும் தந்திடும்
உண்மைத் தன்மைகள் ஆராய
உண்மையாய் இங்கு இடமில்லை

திறன் பேசிகளின் தேடல்
உடனடி உணவாய் ருசித்திடும்
நூலகத் தேடல் அம்மாவின் சமையலாய்
பரிபூரணமாய் நிறைவு தரும்

**ச.வாகீசன்**
ஆசிரியர்
யா/இணுவில் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் மண் தந்த இலக்கியக் களஞ்சியம் கவிஞர் சு.துரைசிங்கம் ஐயா அவர்கள்.

யாழ்ப்பாணத்து தமிழ் எழுத்துலக வரலாற்றில் சுன்னாகம் என்றும் தவிர்க்க முடியாத தனியிடத்தில் அன்று தொட்டு இருந்திருக்கின்றது. தற்போதும் இருக்கின்றது என்பது நிதர்சனமான உண்மை. வரதபண்டிதர் காலம் தொட்டு இன்று வரை எமது பரந்த பிரதேசத்தில் எத்தனையோ எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், கவிஞர்கள் எனப்பலர் தோன்றி மறைந்திருக்கின்றனர். அந்தவகையில் சுன்னாகத்தின் எழுத்துலக வரலாற்றினை எம்மைப்போன்ற இளைய சந்ததிக்கு கடத்தியவர் கந்தரோடையை பிறந்த வீடாகவும், சுன்னாகம் கிழக்கினை வாழந்த இடமாகவும் கொண்ட என்றும் பெருமதிப்பிற்கும் , பேரன்பிற்கும் உரிய கவிஞர் சு.துரைசிங்கம் ஐயா என்றால் மிகையில்லை. ஆவரைப்ப பாராட்டவோ, அவர்தம் பெருமைகளை எடுத்துரைக்கவோ இச்சிறியேனுக்கு அனுபவமோ, அறிவோ இல்லை. அயினும் இத்தமிழ்ப்புலமையாள் எம்மை விட்டு பிரிந்து இம்மாதத்துடன் ஒரு வருடம் ஆகின்றது. எனவே அவரைப்பற்றிய சில தகவல்களை பகிரலாமென எண்ணுகின்றேன்.

2017ம் ஆண்டு இறுதிக்காலம் என்ற ஞாபகம். அயலவர் ஒருவரினால் எனக்கு ஒரு புத்தகம் தரப்பட்டது. புத்தகத்தின் முன்பக்கத்தில் "அரும் பண்பாட்டுக் கோலங்கள்" என்ற முகப்பு. என்றுமே பழையவற்றை அறிய வேண்டும் என்ற ஆர்வ மிகுதியால் புத்தகத்தில் உள்ள ஒவ்வொன்றையும் அறியும் ஆவல் வெகுவாக எழுந்தது. அதனை வாசித்து முடிக்கும்போது தான் மற்றையோரின் பேச்சுக்களும், கதைகளும் "முன்னொரு காலத்தில் நாங்கள் இப்படி..." என்று கூறுவதைக் கேட்டிருப்போம். ஆனால் அதனை எழுத்துருவாக்கி இயல்பான மொழிநடையில் தந்த நூலாசிரியரைப் பற்றி அறிய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. அதன் மூலம் தான் கவிஞரைப் பற்றி பலவிடயங்களை அறிய முடிந்தது.

அதன்பின்னர் அவரை ஊரில் விசேட நிகழ்வு ஒன்றில் கண்டபோது என்னை அவரிடம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தியதுடன், ஐயா உங்களை ஒரு தடைவ உங்கள் வீட்டில் வந்து சந்திக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். அதற்கு அவரும் "ஓம்! தாராளமா வாங்கோ" - "ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்தா நல்லம்" எனக் கூறியிருந்தார். ஆனால் அந்த ஆசை இறுதிவரை நிராசையாகவே போய்விட்டது. அன்று தான் அவரைக் கண்டது முதன்முறையானாலும் எந்தவொரு ஆடம்பரமும் இல்லாத, எளிமையான ஒரு மனிதராக அவரைக் கண்டது இன்றும் நினைவில் உள்ளது. பெரிய எழுத்தாளன், ஓய்வுபெற்ற அதிபர் இவ்வாறு ஒரு எளிய மனிதராக எல்லோருடனும் சகஜமாக உறவாடுவதைக்கண்டு உண்மையிலேயே வியப்பில் ஆழ்ந்துவிட்டேன். அதன்பின்னர் எமது ஊரவரான அ.தம்பித்துரை மாஸ்டர் அவர்கள் எழுதிய "ஈரமில்லா இதயம்" என்ற சிறுகதைத் தொகுப்பில் ஐயா அவர்கள் எழுதிய உரையானது மற்றைய எழுத்தாளர்களை மதிக்கும் பண்பையும், தோளில் தட்டி வெளிப்படையாகப் பாராட்டும் பண்பும் தான் ஐயா அவர்களை இவ்வளவு உயரத்தில் வைத்திருக்கின்றதோ! என்ற எண்ணம் மேலோங்கியது.

1972இல் தெருவிளக்கு என்ற கவிதைத் தொகுப்பில் இருந்து ஆரம்பித்த பயணம் பல தடைகள், சிக்கல்களைக் கடந்து நேர்த்தியான முறையில் வெற்றிப் பாதையில் பயணித்திருக்கின்ற என்பதற்கு "அரும் பண்பாட்டுக் கோலங்கள்" ஐயா அவர்களின் உரை சான்று பகர்கின்றது.

தனியே இலக்கியம் மட்டுமல்லாது அறிவியல், சமயம், சிறுவர் இலக்கியம் என பலதுறைகளில் பற்பல படைப்புக்களை தந்துள்ளார் ஐயா அவர்கள்.

"பண் சுமந்த பாடல்" என்ற கீர்த்தனைத் தொகுப்பானது இறைவனை வாழ்த்தும் நோக்கில் எழுதப்பட்டது. அதன் 1ம் பதிப்பு, 2ம் பதிப்பு என பதிப்புக்கள் காலத்திற்குக் காலம் வெளிவந்தன. அத்துடன் சமய இலக்கிய நூலையும் வெளியிட்டு எமது சமயப் பெருமைகளையும் வெளிக் கொணர்ந்தார். அத்துடன் 2010 இல் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வயல் செய்வோம், பாலன் வருகின்றான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு மகிழ்வோம், நட்பே உயர்வு, தோட்டத்தில் ஆடு ஆகிய சிறந்த நூல்களையும், ஆடும் மயில், மழலைச் செல்லம் போன்ற சிறுவர் பாடல்களையும் வெளியிட்டதாக அறிய முடிகின்றது. அடுத்து முன்னர் குறிப்பிட்டது போன்று சுன்னாகத்தின் தமிழ் இலக்கியப் புலமையாளர்கள் பற்றி ஆராய்ந்து 2008இல் "சுன்னாகத்தில் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள்" என்ற நூலையும் வெளியிட்டார்.

அத்துடன் தனது ஓய்வுக் காலத்தில் வலம்புரி பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருந்து பத்திரிகைத் துறைக்கு பல பங்களிப்புச் செய்ததுடன் பல போட்டிகளை நடாத்துவதற்கு உறுதுணையாகவும் இருந்துள்ளார். தனது கலை இலக்கியப் பணிக்காக பல விருதுகள் பெற்றிருந்தாலும் 2004இல் இலங்கைக் கலாசார அமைச்சு "கலாபூஷணம்" விருது வழங்கிக் கௌரவித்திருந்தது. அத்துடன் சுன்னாகம் பொது நூலகத்தினால் 2019ம் ஆண்டு "தமிழ் சுடர்" என்ற விருதும், உடுவில் கலாசாரப் பேரவையினால் 2017இல் "ஞான ஏந்தல்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதுபோன்ற எத்தனையோ விருதுகளை தனது கலைப்பணிக்காக பெற்றுக்கொண்ட ஐயா அவர்களின் வீட்டில் இவ்விருதுகள் நேர்த்தியான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தனது வாழ்நாள் முழுவதும் கலைப்பணியே மூச்சு என வாழ்ந்ததுடன் தனது குடும்பத்தினரையும் பேணிப் பாதுகாத்து ஒரு சிறந்த குடும்பத் தலைவராகவும் பல சமூக அமைப்புக்களில் தன்னை இணைத்து ஊர் போற்றும் சமூக சேவகனாகவும் வாழ்ந்திருக்கின்றார். இன்றும் எமது ஊரில் "மாஸ்டர்" என்ற பெயரில் ஐயாவின் பணிகளை நினைவு கூருவார்.

இவ்வாறான ஒரு இலக்கியத் தொண்டர் வாழ்ந்த பிரதேசத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பது பெருமைகொள்ள வேண்டிய விடயமாகும். அதுமட்டுமன்றி ஐயாவின் வரலாற்றை இளம் சந்ததிக்கு கடத்துவது எமது கடமையாகும். இதனைக் கருத்தில் கொண்டு சுன்னாகம் சிவன் சிறுவர் கழகம் ஐயாவின் வீட்டுக்குச் சென்று **"செந்தமிழ்க் காவலர்"** என்ற விருது வழங்கித் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, ஐயா அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஒரு வருடம் ஆகின்ற இந்நிலையில் அவரின் சேவைகளை மனதில் இருத்தி அவர்விட்டுச் சென்ற கலை இலக்கியச் செயற்பாடுகளை எமது சமூகம் முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்ற ஆவலையும் வெளிப்படுத்தி நிறைவு செய்கின்றேன்.

தொகுப்பு:-

**சுன்னாகம் பால.திவாகரன்**





கலாச்சார மத்திய நிலையத்தினரால் எமது நூலகத்தில் நடாத்தப்படும் சித்திர வகுப்பு மாணவர்களின் கண்காட்சி 19.10.2023ல் நடைபெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களும் அவற்றிய நூலக நடவடிக்கைகளும் -

1970 - 1980களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்த மேகங்கள் சூழும் வரையில், கிராமிய மட்டத்தில் நூலக சேவையினை வழங்குவதில் மாவட்டசபை உப அலுவலகங்களின் (இன்றைய பிரதேசசபை) கீழ் இயங்கும் பொதுசன நூலகங்களுக்கு அடுத்தபடியாக சனசமூக நிலையங்களே முன்னணியில் நின்றிருக்கின்றன. 1980களின் ஆரம்பத்தில் சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வேலைத்திட்டங்களில் பங்காற்றிய வகையில் 338 சனசமூக நிலையங்களில் பல்வேறு மட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றி வந்துள்ளன என்பதை நானறிவேன். இன்று வலிகாமம் தெற்கு பகுதியில் மாத்திரம் சுமார் 60 சனசமூக நிலையங்கள் செயற்படுவதையும், அவற்றுள் நூலகப் பணியாளர்களைக் கொண்டியங்கும் மூன்று சனசமூக நிலையங்கள் செயற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான சனசமூக நிலையங்கள் புதினப் பத்திரிகைகளையும் சில சஞ்சிகைகளையும் கொண்ட வாசிகசாலைகளாக மாத்திரம் இயங்கி வந்தன. சில சனசமூக நிலையங்கள் வாசிகசாலையுடன் இணைந்ததாக இரவல் வழங்கும் நூலக சேவையினையும் நடாத்தின. நிதிப்பற்றாக்குறை, விஞ்ஞான ரீதியிலான நூலக நிர்வாகம் தொடர்பான அறிவின்மை, உள்ளக நிர்வாகச் சீர்கேடுகள் போன்ற காரணிகளால் சில சனசமூக நிலையங்கள் நூலக சேவையினை திறம்பட நடாத்தமுடியாத நிலையில் காணப்பட்டிருந்தன.

சில இடங்களில் நிரந்தரக் கட்டிட வசதிகள் கொண்டுள்ள சனசமூக நிலையங்கள், கற்றோர் செல்வந்தர் போன்றோர் வாழும் சூழலில் அமைந்திருந்த போதிலும் வாசிகசாலைகளாக மட்டுமே இயங்கி வந்ததையும் அவதானிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலைய நூலகங்கள் சில மிகத் திறமையாக இயங்கி கிராமத்தவரின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து இத்தகைய வெற்றி வாய்ப்பினைப் பெற்றுள்ள நூலகங்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. ஒரு கிராமத்தின் முழுமையான நிர்வாகத் திறனில் தங்கி இயங்கும் சனசமூக நிலையங்கள், சமய நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றைச் சார்ந்த நூலகங்களின் நாளாந்த நடவடிக்கைகளில் பல சிக்கல் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. பொதுநல நோக்கத்தைக் கருத்திற்கொண்டு இத்தகைய பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்த்துக்கொண்டு கிராமத்தவரின் ஒத்துழைப்புடன் நூலகத்தை நிர்வகிப்பது சிறிது கடினமாக இருப்பினும், அது இயலாத காரியமல்ல.

ஒரு சனசமூக நிலையம் வாசிகசாலையாக இயங்குவதனால் மாத்திரம் அதன் நோக்கம் ஈடேறிவிடுகின்றதென்று நினைப்பது தவறாகும். கிராமத்தில் சிலர் தமது சொந்தப் பாவனைக்கெனக் கொள்வனவு செய்யும் தினசரிப் பத்திரிகைகளையும் சில சஞ்சிகைகளையும் அயலில் உள்ள சனசமூக நிலையத்திற்குத் தற்காலிகமாக வழங்கி ஒரு பொதுப்பணிக்கு உதவுகின்றனர். இவற்றை நிர்வகிப்பது மட்டும் ஒரு வாசிகசாலைப் பொறுப்பாளரின் பிரதான பணியாக இன்று கருதப்படுகின்றது. இது தவறான ஒரு கருத்தாகும்.

ஒரு கிராமத்தில் உள்ள மனித, பொருள் வளங்களின் அளவையும், வசதியையும் கொண்டு ஒரு சனசமூக நிலைய நூலகத்தை எளிய முறையில் இயக்க முடியும். பெருமளவு நிதி ஒதுக்கீடோ அதிக பணச்செலவோ ஆரம்ப முதலீடாக அமைய வேண்டியது இல்லை. பொதுப்பணிச் சிந்தையுள்ள சிலரின் ஒத்துழைப்பே ஆரம்ப கட்டத்தில் மிக முக்கியமானதாகும். காலப்போக்கில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு தனக்கென ஒரு முதலீட்டைக் கட்டி எழுப்பிக் கொண்டு அந்த நிதியின் உதவியுடன் எதிர்காலத்தில் நூலக சேவையினை விரிவுபடுத்திச் செல்ல முடியும். ஒரு சனசமூக நிலையத்தின் அல்லது கிராம நூலக மொன்றின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஒரு நிர்வாகக் குழு அமைத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம். பொறுப்புணர்வும் கல்வி அறிவும் உள்ளவர்களாகவும், நூல் ஆர்வம் மிக்கவர்களாகவும், அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும், நாளாந்தம் தமது தனிப்பட்ட கடமைகளுடன் அப்பணிக்கு கணிசமான நேரத்தை செலவிடத் தயாரானவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும்.

குழுவின் செயலாளர் நூலகத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்ற வேண்டும். மாதம் ஒரு தடவை அல்லது இரு மாதங்களுக்கு ஒரு தடவை நிர்வாகக் குழுக் கூட்டம் கூட்டப்பெற்று அதில் தீர்மானிக்கப்படும் வேலைத்திட்டம் குழுவின் செயலாளரான நூலகப் பொறுப்பாளர் கிராம இளைஞர்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

அண்மைக் காலங்களில் கிராமங்களில் இளைஞர் பற்றாக்குறை கருத்திற்கெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். கிராமிய சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பல கிராமங்களில் யுவதிகள் சனசமூக நிலையங்களுக்குச் சென்று பத்திரிகை வாசிப்பது அல்லது நூல்களை இரவல் பெறுவது குறைவாகக் காணப்படுகின்றது. எனவே நாம் இங்கு குறிப்பிடும் கிராம நூலகத்திட்டங்களில் கூடிய அளவு பெண்களின் பங்களிப்பும் இடம் பெறல் வேண்டும்.

ஒரு சனசமூக நிலையம் தனது நூல் சேகரிப்பைத் திட்டமிட்ட பல வழிகளில் மேற்கொள்ள முடியும்.கிராமத்தில் வருடாந்தம் நூலக வாரம் ஒன்றினை ஒழுங்கு செய்து கிராமத்தில் உள்ள வீடுகளில் கேட்பாரற்றுக் கிடக்கும் நூல்களை நூலகத்துக்காகப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய நடவடிக்கைகளின் போது நூல்களைத் தேர்ந்தெடுத்தல் அவசியமாகும். பாவனைக்கு உதவாத நூல்களை, அவை நூல் உருவில் இருக்கும் ஒரே காரணத்திற்காகச் சேகரிப்பில் அன்பளிப்பாக ஏற்றுக் கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

கிராமத்தில் உள்ள கற்றோரை அணுகி மாதம் ஒரு முறை நூல் வழங்கும் படி கேட்கலாம், கிராமத்தவர் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த தினப் பரிசாக ஆண்டொன்றுக்கு ஒரு நூல் என்ற ரீதியில் அவர்களுக்கு அண்மையில் உள்ள கிராம நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கலாம். சனசமூக நிலைய நூலகர் தமது நூலக அங்கத்தவர்களின் பிறந்த நாட்களை பாவிக்கப்படாத ஒரு பழைய தினக் குறிப்பேட்டில் (டயறி) பதிந்து வைத்து உரிய நரட்களுக்கு ஒரு வாரத்திற்கு முன் சம்பந்தப்பட்டவருக்கு அவருடைய பிறந்த நாளை நினைவூட்டி பிறந்ததினப் பரிசைக் கோரினால் நிச்சயம் நூல் அன்பளிப்பாகக் கிடைக்கும்.

குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் ஏன் இளைஞர்களுக்கும் கூட பிறந்தநாள் பரிசில்களாக நூல்கள் வழங்கப்படுவதை ஆதரிக்க வேண்டியது அவசியமாகும். அத்தகைய பரிசில்கள் அவர்களை வாசிப்பின் பால் ஆர்வங் கொள்ளச் செய்வதுடன் நூல் வெளியீட்டாளர்களுக்கும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும். இத்தகைய பரிசில்களை பெற்றவர்கள் தமது ஞாபகார்த்தமாகப் பின்னர் நூலகத்திற்கு அவற்றை வழங்கலாம்.

தத்தமது ஊர்களைச்சேர்ந்த புலம்பெயர் மக்களை அவர்களது குடும்பத்தினரின் வாயிலாக அணுகி கிராம நூலகத்திற்கு நூல்களை வாங்கித் தருமாறு கோரலாம். இக்கோரிக்கை இரு வழிகளில் மேற்கொள்ளப்படலாம்.

1. தெரிவு செய்யப்பட்டதொரு நூற் பட்டியலை பிரமுகரிடம் கொடுத்து அதில் குறிக்கப்பட்ட நூல்களை கொள்வனவு செய்துதரும்படி கேட்கலாம்.
2. நன்கொடையாக ஒரு தொகைப் பணத்தை அவரிடம் இருந்து பெற்று அப்பணத்திற்கு நூல்களைக் கொள்வனவு செய்து அவரது அன்பளிப்பாக அவற்றை ஏற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட இரு வழிகளிலும் வேறுபல உத்திகளைக் கையாண்டு ஒரு சனசமூக நிலையம் நூலீட்டலை மேற்கொள்ளலாம். சேகரிக்கப்படும் நூலின் எண்ணிக்கை சிறிதாகக் காணப்படினும் காலப்போக்கில் அது வளர்ந்து செல்லும் தன்மை கொண்டது. ஒரு சனசமூக நிலையத்தின் ஆரம்ப காலத்தில் நூல் இரவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கலைப் பற்றிக் சிந்திக்கக்கூடாது என்பர். ஆரம்ப கால நூலகங்கள் உடன் உதவும் நூலகங்களாக மட்டுமே இயங்குதல் வேண்டும். நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நூலகம் திறக்கப்பட்டு வாசகர்களுக்கு நூல்களை வழங்கி அவர்கள் அங்கிருந்தே அவற்றை வாசிக்கும் ஒழுங்குகளை செய்துதருதல் வேண்டும். நூலகம் போதிய அளவு நூற் சேர்க்கையை வளர்த்தெடுத்த பின்னர் இரவல் வழங்கும் பிரிவை ஆரம்பிக்கலாம்.

ஒரு நூலகத்தில் உள்ள சகல நூல்களும் ஒரு பதிவேட்டில் பதியப்படல் வேண்டியது அவசியமாகும்.நூலின் பெயர் ஆசிரியரின், ஆசிரியர்களின் பெயர், வெளியிட்ட இடம், வெளியீட்டாளர் பெயர், பக்கங்கள், பதிப்பித்த ஆண்டு, நூலில் குறித்த விலை போன்ற தகவல்களை ஒரு சி.ஆர் பதிவேட்டில் பதிந்து வைத்தல் வேண்டும். நூல் ஒவ்வொன்றிற்கும். ஒரு தொடர் இலக்கம் வழங்கப்படல் வேண்டும். அத்தொடர் இலக்கமே நூலுக்கான பதிவிலக்கமாகும். பின்னர் எங்காவது அந்நூலின் விபரங்களை அலுவலகத் தேவையின் நிமித்தம் குறிப்பிடவேண்டி நேருமிடத்து இத்தொடர் இலக்கங்களை நூலின் பெயருடன் குறிப்பிடுவதன் மூலம் வீண்காலவிரயத்தையும் தவிர்க்கலாம். இலங்கை தேசிய நூலகம் குறைந்த விலையில் இத்தகைய பதிவேடுகளை அச்சிட்டு விநியோகிக்கின்றன.

நூல்கள் காணாமல் போவதை தவிர்க்கும் நோக்குடன் காலாண்டு அல்லது அரை ஆண்டுக்கு ஒரு தடவை நூல்களின் இருப்பை கணக்கெடுத்தல் வேண்டும். குறுகிய கால இடைவெளியில் நூல் இருப்பு கணக்கெடுக்கப்படுவதால் தொலைக்கப்பட்ட நூல்களைத் தேடிப்பிடிக்க அதிக வாய்ப்பு ஏற்படும்.

நூல்கள் அன்பளித்தவர்களின் பெயர் விபரங்கள் ஒரு சில நூலகங்களிலே பேணப்பட்டு வருகின்றன. வேறு பல நூலகங்கள் அன்பளிக்கப்பட்ட நூல்களில் மட்டும் அன்பளிப்பு விபரங்கவைக் குறித்து விடுவதுடன் நின்று விடுகின்றன. நூல்கள் அன்பளிப்புச் செய்தவர்களின், பெயர், முகவரி, அவர் அன்பளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி, நூலின் பெயர், அதன் விலை (தெரிந்தால் மாத்திரம்) ஆகிய தகவல்களை தனியானதொரு பதிவேட்டில் பதிந்து வைத்தல் வேண்டும். நூலில் மாத்திரம் குறிப்பதுடன் நின்று விடலாகாது

நூல்கள் தவிர்ந்த மேலும் பல அறிவியல் சாதனங்கள் ஒரு சனசமூக நிலைய நூலகத்தில் சேகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கிராமத்தின் சிறப்பினை வெளியாருக்கு உணர்த்தும் பிரதேச வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள்அல்லது அவற்றின் புகைப்படப் பிரதிகள், சின்னங்கள் புகைப்படங்கள், மாதிரி அமைப்புக்கள் (Models) போன்றவை சேகரித்துப் பேணப்படலாம். சில கிராமங்களில் பிரபல்யமானதும் அக் கிராமங்களுக்கு உரியதுமாகிய கிராமியப் பாடல்கள், கூத்துக்கள் போன்ற நாட்டார் இலக்கிய வடிவங்களை எழுத்துருவிலும் ஒலியுருவிலும் பதிந்து வைக்கலாம். கிராமங்களில் உள்ள சிறப்பு மிக்க கோவில் சிற்ப வேலைப்பாடுகள் கலைநுணுக்கம் மிக்க கோயில் வாகனகளின் உருவப்படங்கள், போன்றவற்றைப் புகைப்படமாகத் தொகுத்து வைக்கலாம். கிராம நூலகத்தின் பெறுமதியினை அவை உயர்த்தும். ஒரு சனசமூக நிலையம் தன் பிராந்தியத்தில் கலாச்சார நிலையமாகவும், ஆவணக் காப்பகமாகவும், தகவல் தொடர்பாகவும் செயற்பட வேண்டும் என்ற கருத்து இங்கு கவனத்திற்கெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சனசமூக நிலையமானது,தான் சார்ந்த கிராமத்திலுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள், நாட்குறிப்புக்கள் கடிதங்கள் போன்றவற்றை வரலாற்று முக்கயத்துவம் கருதி சேகரித்து வைக்கவேண்டும். கிராமத்தின் விரிவான வரைபடம் ஒன்றைத் தயாரித்து நிலையத்தில் வைத்திருக்கலாம். அதில் பிரதான பாதைகள் மத தலங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையம், மருத்துவமனை, தபால் நிலையம், வர்த்தக நிலையம் பேரூந்து நிலையம் போன்றவை குறிக்கப்பட்டிருத்தல் நன்று. கிராமம் தொடர்பான அடிப்படைப் புள்ளி விபரங்களான சனத்தொகை, பாடசாலை மாணவர்கள் எண்ணிக்கை விபரம் போன்ற தகவல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூர் கிராம சேவையாளர், பாடசாலை நிர்வாகிகள் போன்றோரின் உதவியுடன் காலக்கிரமத்தில் சேகரித்து வைத்திருக்கலாம். இவை காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்படல் வேண்டும்

கிராமத்தில் இயற்கை எய்தியவர்களின் பெயரால் வெளியிடப்படும் நினைவு மலர்கள் (சமரகவி) சேகரிக்கப்பட்டு அவர்களது பெயர் அகர வரிசை ஒழுங்கில் அடுக்கி வைத்திருத்தல் வேண்டும். கிராமத்தைப் பற்றி அல்லது கிராமத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றி வெளிவரும் புதினப் பத்திரிகைச் செய்திகளை கத்தரித்து தனியாக ஒரு பதிவேட்டில் ஒட்டிச் சேகரித்தல் வேண்டும். இத்தகைய பத்திரிகைச் செய்திகள் என்று, எந்தப் பத்திரிகையில், எந்தப் பக்கத்தில் வெளிவந்தது என்ற குறிப்பும் காணப்படுதல் அவயமாகும்.

சனசமூக நிலையங்களில் பாலர்களுக்கான கதை நேரம் ஒன்றை நூலகத்தில் விடுமுறை நாட்களில் நடாத்தலாம். கிராமத்து இளைஞர்களின் உதவியுடன் இக்கதை நேரத்தை ஒழுங்கு செய்வதன் மூலம் சிறுவர்களையும் நூல்களையும் இணைத்து வைக்கலாம். இதனால் கிராமத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் உயிரோட்டம் உள்ள அமைப்பாகவும் கிராமத்தவரின் ஆதரவையும் அக்கறையையும் பெற்ற ஸ்தாபனமாகவும் மாறும் வாய்ப்பு ஏற்படும். கிராம இளைஞர்களினதும் மாணவர்களினதும் உதவியுடன் கையெழுத்துச் சஞ்சிகைகளை சனசமூக நிலையம் நடாத்தலாம். இக் கையெழுத்துப் பத்திரிகையின் பிரதிகளை அண்மையில் உள்ள பொதுநூலகத்துக்கோ பாடசாலை நூலகத்துக்கோ அனுப்பி வைக்கலாம். கிராம நூலகங்களுக்கு இடையே கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இச் சஞ்சிகைகளை ஊடகமாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சனசமூக நிலையங்கள் மேற்கொள்ளும் நூலக நடவடிக்கைகள் குடத்துள் விளக்காகவும் விரிவுபடும் வாய்ப்பு அற்றதாகவும் இருப்பதற்குக் காரணம் வேறு ஒரு நிறுவனத்துடனும் தொடர்பின்றி சிறு வட்டத்துக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்குவதாகும். ஒவ்வொரு நூலகமும் தனித்தனித் தீவுகளாக விளங்குவது எவ்வகையிலும் ஆரோக்கியமானது அல்ல. ஒரு சனசமூக திலையம் நூலகசேவையினைத் தன் கிராம மக்களுக்கு வழங்குவதுடன் மட்டும் நில்லாமல் தனது முயற்சிகளையும் அடைவுகளையும் அயலில் உள்ள சகோதர சனசமூக நிலையங்களுக்கும் பிற பொதுநல ஸ்தாபனங்களுக்கும் தெரியப்படுத்தும் மூயற்சியினை மேற்கொள்ள வேண்டும். சனசமூக நிலையங்களின் ஒன்றியம் போன்ற அமைப்புக்கள் இத்தகையதொரு வலையமைப்பை திட்டமிட்டு மேற்கொண்டு சனசமூக நிலையங்களுக்கு இடையே தொடர்புப் பாலங்களை அமைத்து அவற்றுக்கிடையே கூட்டுறவை வளர்க்க ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**என்.செல்வராஜா**
நூலியலாளர்,
லண்டன்.





சிறுவர் வாசிப்பு வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வாழ்வில் பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களும் பிள்ளைகளின் போக்குகளும்

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது இன்னும் உயர்வாக அவனை பூரண மனித உலகமாக்குகின்றது என்றும் பெருமைப்படுத்தலாம். ஒரு நல்ல புத்தகம் ஒரு நண்பனைவிட மேலானது. நூலகம் என்பது சிறந்ததோர் பல்கலைக்கழகமாகும். ஒருவரை வெறுக்காமல் பகைக்காமல் விரட்டாமல் சளைக்காமல் அறிவு மேதமையை வழங்குவது நூல்கள் மட்டுமே. இந்த வகையில் பிள்ளைகளை சிப்பிகளாக செதுக்கி பயிற்சியளிப்பதற்கு பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் மற்றும் ஏனையோருக்கும் முக்கிய கருவியாக அமைவது வாசிப்பும் நூலகமும் எனக்கூறி சர்வதேச வாசிப்புதினம் அமைவதாக

பெற்றோர்கள் எனப்படுபவர் யார்? குழந்தை கரு உருவான முதல் பத்து மாதம் சுமந்து மரணவலியை அனுபவித்து பிரசவித்து பகல் இரவாக விழித்திருந்து தாயானவள் தன் உதிரத்தை பாலாக சுரந்து ஊட்டி வளர்க்கின்றாள். பல்வேறு கனவுகளுடன் பாடசாலையை தெரிவுசெய்து தம் ஊதியத்தில் ஒரு பகுதியை பிள்ளையின் கல்வி சுகாதாரம் மற்றும் நலன்களுக்காக செலவிடுகின்றார்கள். நாளை என் பிள்ளை ஒரு சிறந்த ஞானியாக விளையாட்டு வீரனாக வைத்தியராக இவ்வாறு பல்வேறு விதமாக தினமும் கனவு காண்கின்றார்கள். இதில் சில பெற்றோரின் கனவுகள் நனவாகின்றன. பலரின் எதிர்பார்ப்புகள் கலைந்து போகின்றன.

மேலும் தாம் கடந்த காலத்தில் பெறமுடியாதவற்றை எல்லாம் தமது பிள்ளைகள் பெறவேண்டும் என விரும்புவதுடன் அதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்றனர். தமக்கு விரும்பிய உணவு, உடை, அணிகலன்கள், கொண்டாட்டங்கள், பட்டம், பதவி நித்திரை, நிம்மதி, ஆசாபாசங்கள் போன்றவற்றை கைவிடுகின்றனர். யாராலும் எட்டமுடிளாத சிகரத்தை தம்பிள்ளை எட்டவேண்டும் என எண்ணுகின்றனர். சுருங்கக்கூறின் ஒழுக்கசீலர்களாகவும் கல்வியில் மாமேதையாக மேம்பட்டு பார் போற்ற வேண்டும் என உந்தப்படுபவர்களே பெற்றோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால வாழ்க்கையில் முன்னைய காலங்களைவிட போதியளவு வசதி வாய்ப்புக்களை பெறும் வாய்ப்பு அதிகமாகவே உண்டு. ஆனால் எவ்வளவு வெற்றி பெறுகின்றார்கள் என்றால் மிகசொற்ப வீதத்தினரே. கல்வியின் முக்கியத்துவத்தை உணர பலர் மறுக்கின்றனர். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, நாகரிகமோகம், ஊடக வளர்ச்சி, உலகமயமாதல் என்பவற்றின் பெறுபேற்றை எட்டாமல் அவற்றினை பயன்கொள்ளா வகையில் பிரயோகிப்பதும் சிந்திப்பதும் ஒரு வழமையாகி பாதியிலே வாழ்க்கை இலக்கை இழக்கின்றனர். இவை மிகவும் வேதனைக்குரியது.

எனவே பிள்ளைகள் மாணவர்களை சரியான வழியில் நடத்தி செல்வதற்கு பலர் இணைந்து செயலாற்ற வேண்டிய கட்டாய நிலமை ஏற்பட்டுள்ளது. முக்கியமாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் மிகவும் முக்கியமாக இடம்பெறுகின்றவர்களாவர். முக்கியமாக கல்வியின் பெருமை முக்கியத்துவத்தை உணர்த்துதல் அவசியம்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

"எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில்
கற்போரை வருக என்பர் வெற்றி வேட்கை"

"வெள்ளத்தாற் போகாது வெந்தழலால் வேகாது
வேந்தரால் கொல்லத்தான் முடியாது"

மேற்படி சிந்தனைக்கமைவாக கல்வி பெருமைக்காக பெற்றுக்கொள்வதல்ல பெற்றதனால் பெருமையை தேடிக்கொள்வது என்றவாறு பிள்ளை வளர்ப்பும் ஆசிரியர் கற்பித்தல் வழிகாட்டலும் அமைவது மேலானது.

கல்வியின் பெருமை மட்டுமன்றி கற்காமையினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாகவும் விழிப்புணர் நிலை பொருத்தமான முறையில் நுட்பங்களை பயன்படுத்தி வழங்குதல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது கற்காமையினால் வறுமை, வருமானமின்மை, வேலையின்மை, தாழ்வுமனப்பான்மை, சமூகபுறக்கணிப்பு, காதல் கொள்வோர் பின்வாங்கல், விரக்தி மற்றும் எதிர் நடத்தைகளான புகைத்தல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு சிறை செல்லல் அதுவே பழகிப்போதல் நிலைக்கு தள்ளப்பட்டு வாழ்வின் இலக்கை இழந்துபோகும் நிலை உண்டாவதை தவிர்க்க முயலவேண்டும்.

வீட்டுச்சூழல் பிள்ளைவளர்ப்பு முறையும் பிள்ளையின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது. பெற்றோரின் அளவிற்கு அதிகமான பாசப்பிணைப்பும் சுயாதீன சிந்தனை வளர்ச்சியை மட்டுப்படுத்துகின்றது. முக்கியமான அடிப்படை விடயங்களை தவிர்த்து ஏனைய விடயங்களில் சிந்திப்பதற்கும் பொறுப்பு வகிப்பதற்கும் பருவத்திற்கேற்ற வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும். தத்தம் பிள்ளைகளை குறுகிய வட்டத்தில் கட்டுப்படுத்தி வளர்க்காமல் அரங்க விற்பன்னர்களாகவும் தம்மைதாமே பாதுகாக்கும் வீரர்களாகவும் சுதந்திர நீதிக்கான வீரர்களாகவும் வளர்க்க ஒவ்வொரு பெற்றோரும் முன்வருதல் வேண்டும்.

ஆசிரியர் என்பவர் தனியே கல்வி அறிவை மட்டும் வழங்குபவராக மட்டுமன்றி பல்வேறு வகிபாகங்களை வகிக்க முன்வருதல் அவசியமாகும்.
“ ஊக்குவிக்க ஆளிருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்” இவ்வாறு பிள்ளையின் ஆளுமையை விரிவடையச் செய்வதில் முன்வருதல் அவசியமாகும்.

கல்வியை வழங்குவதில் சமூகத்தின் பங்கானது முக்கியமானதாகும். கல்வி மூலமே அறிவு சார்ந்த சமூகம் உருவாக்கப்படுகின்றது. சமூக கடமைகளில் பிள்ளைகளுக்கான கல்வியை பெற்றுக்கொடுத்தல் இன்றியமையாதது. ஒரு மாணவனை கல்வியில் புகுத்தும்போது அவ் மாணவன் சமூகத்திலுள்ளவர்களை எவ்வாறு மதிக்கின்றான் எவ்வாறு உரையாடுகின்றான், உரிமைகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளல் வேண்டும் அதனை எவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ளலாம் என்பதை மாணவர்களுக்கு சமூகமானது கற்றுக்கொடுக்க வேண்டும். சமூகத்தில் நல்ல பிரஜையாக திகழ வேண்டுமானால் சமூக மதிப்புக்கள், குறிக்கோள்கள், நம்பிக்கை விருப்பு பழக்கவழக்கங்கள், பண்பாடு என்பவற்றை பெற்றிருக்க வேண்டும். இதற்கு பெற்றோர் ஆசிரியர் சமூகம் இணைந்து செல்ல வேண்டும் என்பதை உணரமுடிகின்றது.

எனவே தற்கால பிள்ளைகளின் போக்குகளும் சிந்தனைகளும் மாறுபட்டு வேறுபட்டு செல்வதனை கவனத்திற் கொள்ள வேண்டிய தேவை மிகவும் வேண்டியதொன்றாகும். சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களை ஈனப்படுத்தும் செயற்பாடுகள், சமூக சீரழிவு, சிறுமைகள் இல்லாத மேன்மைமிக்க சமூக நாளாக வாசிப்பு தினத்தை உலக தீப நாளாக ஆக்கி மகிழ்வோம்

**செல்வி இந்திராதேவி செல்வநாயகம்**
விரிவுரையாளர் (ஓய்வு நிலை),
தேசிய கல்வியியற்கல்லூரி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.வை.தா.வின் பெயர் சொல்லும் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரனார் (B.A.)
## (இலங்கைப் பல்கலைக்கழக (கல்லூரி) முதல் தமிழ் விரிவுரையாளர்)

கௌ.சித்தாந்தன்



சி.வை.தா.



அழகசுந்தரனார்

தந்தைவழிப் பேரனின் பெயரைப் பேரப்பிள்ளைக்கு வைக்கும்மரபு தற்காலத்தில் மதிப்பிழந்து நடைமுறையில் அற்றுப்போய்விட்டது. **தந்தையின் பெயரால் பிள்ளைகள் பிரசித்தி பெறுவதும், பிள்ளையின் பெயரால் தந்தை மதிப்புப் பெறுவதும்** இரண்டு விதமாகவும் நடைபெறும் என்பதற்கு வள்ளுவர் குறள் சான்று பகரும். ஒருவகையில் இதற்கு ஏற்றாற்போல சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் மகனாகிய பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி Francis Kingsbury (08.8.1873-12.4.1941) அவர்களின் வரலாறும் அமைகிறது. இவருக்குத் தந்தையார் வைத்த பெயர் **அழகசுந்தரம்** என்பதாகும். அழகு என்பதற்கு **சௌந்தர்யம், சுகம், சிறப்பு, ஆரியம், இராமம், எழில், சித்திரம், செழுமை, தகை, தேசிகம்,பரதம்,பொன், மதன், மாண்பு, வண்மை,வடிவு, வளம், பொலிவு, ஒழுங்கு, யௌவனம்** முதலான தொண்ணூறு பொருள்கள் அகராதியிலே உண்டு. தமிழும், சம்ஸ்கிருதமும் பொருள் அளவிலும் கலந்திருக்கும் நுட்பம் அழகசுந்தரம் பெயரில் உண்டு. **பெயருக்கேற்றாற்போல எடுப்பான, வசீகரமான தோற்றம்** கொண்டவர் என்பதனை **கலாநிதி.எஸ்.ஜெபநேசன்** அவர்களது நூலிலுள்ள முழுமையாக நிற்கும் படத்தின் மூலமும், பேராதனைப்பல்கலைக்கழகத்து தமிழ்த்துறையிலே பென்னம்பெரிதாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தின் மூலமும் அறியலாம். இவரை நேரிலேயே கண்டவர்கள் இன்று அரிதென்றே கூற வேண்டும். **பேராசிரியர் சி.தில்லைநாதன்** அவர்கள் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களை **அ.ச.ஞானசம்பந்தன் (பேராசிரியர்)** அவர்கள் மூலம் அறிமுகம் செய்யும்முறை நயக்கத்தக்கது. 1941 ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தேசிய வைத்தியசாலைக்கட்டிலில் மல்லாந்து கிடந்தபடியான, அழகிய, சாந்தமான, நெடிய பருத்த தோற்றமுள்ள ஒருவர், அ.ச.ஞானசம்பந்தனைத் தமது அருகே அழைத்து, தாம் யாரென்று தெரியுமா? என்று கேட்டுவிட்டுத் தாம் சி. வை. தாமோதரம்பிள்ளையின் மகனென்று பதில் கூறினாராம்.

சி.வை.தாமோதரம்பிள்ளையின் (1832-1901) தாயார் **மயில்வாகனம் பெருந்தேவியார்,** ஏழாலை மத்தியைச் சேர்ந்தவர். தந்தையார் **குருநாதர் வைரவநாதர்** சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர். "பிள்ளையவர்கள் 1832 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பண்ணிரண்டாம் தேதி ஏழாலையிற் பிறந்தார்" என்றுதான் **கலாநிதி.பொ. பூலோகசிங்கம்** (1936-2019) தமது தமிழ்இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள் (1970) எனும் நூலில் எழுதியிருந்தார். சி.வை.தா. ஏழாலையில் உள்ள தாயாரின் **"மயிலன்வளவு"** எனும் இடத்திலிருந்து தான் தெல்லிப்பழையில் இருந்த அமெரிக்கன்மிஷன் பாடசாலைக்கும், குரு- சீடமுறையில் சுன்னாகம் **முத்துக்குமாரக் கவிராயிடமும்** சென்று கற்று வந்தார். சி.வை. தா அவர்களின் துணைவியாரும்,அழகசுந்தரன் அவர்களின் தாயாருமாகிய **பிள்ளையினார் நாகமுத்தம்மாள்** அவர்களும், அழகசுந்தரன் அவர்களின் துணைவியார் **சிதம்பரப்பிள்ளை மேரி இரத்தினம் சமாதானம்** அவர்களும் ஏழாலையினை அடுத்துள்ள தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்களே. எனவே அழகசுந்தரன் அவர்கள் தந்தையாரின் பணி நிமித்தம் சென்னை தண்டையார்ப்பேட்டையில் பிறந்தாலும், ஏழாலையைச் சேர்ந்தவர்கள் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களையும் தமது ஊருக்கு உரித்தானவர் என்று உரிமை கொண்டாடினால் அதில் உண்மையிருக்கிறது.

அழகசுந்தரன் அவர்கள் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலிருந்த தமிழ்ப்பாடசாலையிலும், சென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்வி கற்றவர். இவரின் தந்தையார் சி.வை.தாமோதரம் பிள்ளை சைவராகப்பிறந்து, வளர்ந்து கிறிஸ்தவராக மாறி நாவலரின் செல்வாக்கினால் சைவத்துக்கு மாறிப்பின் சைவராகவே இறுதிவரை வாழ்ந்தவர். ஆனால் அவரது மகன் அழகுசுந்தரனார் அவர்கள் 20 ஆண்டுகள் வரை சைவராகவே வாழ்ந்து, **1893** ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தேவாலயத்தில் ஞானஸ்நானம் (**Baptism**) பெற்று கிறிஸ்தவராகி இடையிடையே அந்தச்சமயத்திலும் முரண்பாடுகளைக் காட்டினாலும் இறுதிக்காலம் வரை அந்நெறியில் நின்று நிலைத்திருந்தவர்.

இவர் கிறிஸ்தவத்திற்கு மாறியமைக்குப் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. 1892 ஆம் ஆண்டு சென்னையில் அமெரிக்க மிஷனைச் சேர்ந்த **வண. பான்கேஸ்ட்** அவர்களின் பிரசங்கத்தினைக் கேட்டு மனமாற்றமடைந்து மதம் மாறினார் என்று தான் எஸ். ஜெபநேசன் "யாழ்ப்பாணத்து கிறிஸ்தவக் கவிஞர்களும் கீர்த்தனைகளும் எனும் நூலில் (ப.43) எழுதியுள்ளார். இதனைவிட அவரது மதமாற்றத்திற்கு வேறுபல காரணங்களும் இருந்திருக்கின்றன. அழகசுந்தரனார் தந்தையாரைப் போன்று தலைசிறந்த தமிழ்ப் புலமையாளன், கவிஞருங்கூட. இவருக்கு அப்பர் சுவாமிகள், மணிவாசகர் ஆகியோருடைய திருமுறைப் பாடல்களில் அதிக ஈடுபாடு இருந்திருக்கின்றதென்பது அவரது நூல்களில் அவர் பயன்படுத்திய பாடல்கள் மூலம் தெரிகின்றது. அப்பர் சுவாமிகளுக்கும் அவர் பால்ய வயதிலே அனுபவித்த துன்ப துயரங்க சம்பவங்களே அவர் சமணத்துக்கு மாறக்காரணம் என்பர். அழகசுந்தரனாரும் தமது ஒன்பதாவது வயதிலேயே தாயாரை இழந்தமையும், அதற்கு முதலில் பெரியதாயார் இறந்தசெய்தியும், தமது தமையன்மார் தமது காலத்தில் இறந்தமையும், தந்தையார் மறுமணம் செய்தமையும், தான் காதலித்துத் திருமணம் புரிந்த கிறிஸ்தவப்பெண்ணைத் திருமணம் செய்ய தந்தையார் மதத்தின் பெயரால் தடையாக இருந்தமையும மதம்மாற முக்கிய காரணங்களாக இருந்திருக்கும்.

இவர் கிறிஸ்தவத்திற்கு மாறியபின், 1898இல் தென்னிந்தியாவிலுள்ள பசுமலைத் தேவாலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக்குருவாகவும், 1899 இல் அதன் பிரதமகுருவாகவும் நியமனம் பெற்றார். அக்காலத்திலேயே இலங்கை, இந்தியா, பர்மா போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மதப்பிரசார நடவடிக்கைகளிலும் கல்வித் தொண்டிலும் ஈடுபட்டார் எனப்படுகின்றது. இச் சுற்றுப்பயண காலத்திலேயே இலங்கை யாழ்.ஏழாலை வடக்கிலும், தெற்கிலுமுள்ள அமெரிக்கன்மிஷன் பாடசாலைகளுக்கு இவரால் உதவியும், ஒத்தாசைகளும் வழங்கப்பட்டதாகவும் அறிகின்றோம் .

இவரது கல்வித்தொழிற்பணி எனும் வகையில் (1910-1919) வரை பங்களூர் ஐக்கிய இறையியல் சாஸ்திர கலாசாலையிலே தமிழ், சைவம், சம்ஸ்கிருதப் பாட விரிவுரையாளராகவும் (Professor of Tamil united theological college in Bangalore) 1926 - 1936 வரை, இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகவும் (lecturer in Tamil,Ceylon university college, Colombo) பணியாற்றியுள்ளார். **இலங்கை,அண்ணாமலை, ஆகிய பல்கலைக்கழகங்களின் முதல் தமிழ்ப்பேராசிரியரான சுவாமி விபுலானந்தர்** (1892-1947) இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரிக்கு தமிழ்விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை என்பதனை அறிந்தபின்பே பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்கள் விண்ணப்பித்து தமிழ்விரிவுரையாளரானார் என்பதும் பல்கலைக்கழக விரிவுரையாளர் விண்ணப்ப வரலாற்றிலே முக்கியமானதொன்றாகும். அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழக (கல்லூரியின்) முதல் தமிழ் விரிவுரையாளர் என்னும் முத்திரையினையும் பதித்துக் கொண்டார். இது பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களது **கால ,நியதி தத்துவ நம்பிக்கைக்கும் நேர்மைக்கும்** சான்று பகர்வனவாகும். பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆங்கிலமொழி மூலம் கற்றுத் தம்மிடம் தமிழ் படிக்க வந்தவர்களுக்கு இவர் திருக்கோவையார் கற்பிக்கும்போது செய்யுள்களை கரும்பலகையில் எழுதி எழுத்துக்கூட்டி வாசித்துக் கற்பிப்பாராம் என்று **தி.க. முத்துச்சாமி** எழுதியுள்ளார்.

சமயபோதகர், தமிழ்விரிவுரையாளர் என்பதுடன் அஞ்சாமையும், துணிச்சலுமிக்க ஒருயுத்த வீரராகவும் பணிபுரிந்தார் என்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் உலக மகா யுத்தம் (1919-1921) நடந்த காலத்தில் கிறிஸ்தவ போர்வீரர்களுக்காக இந்தியப் படையுடன் சேர்ந்து போர் வீரர்களுக்கான உடையை அணிந்து, தமது பங்களிப்பினை வழங்கி இந்திய இராணுவத்தாலும் சிறப்பிக்கப்பட்டவர் என்று கூறப்படுகின்றது.

இவரது எழுத்துப்பணிகளைப் பொறுத்தவரையில், இன்றும், இவரது நாமத்தைச் சொல்லத்தக்கதாக இவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டனவான பலநூல்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

1. இராமன்கதை- The story of Rama
2. பாண்டவர்கதை- The Pandavas
3. சாந்திரகாசம் (வசனநாடகம்)- Candrahasa
4. ஏசுவரலாறு- Life of Jesus
5. அகப்பொருட்குறள்- Ahapporul kural
6. கடவுள்வாழ்த்துப்பா- Kadavul Valthuppa
7. மனோன்மணி நாடகம்- Manonmani
8. நாசரேத்தின் யேசு- Jesus of Nazareth
9. Hymns of the Tamil Saivite Saints

பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்கள் இலங்கை வானொலியிலும் பல தடவை உரை நிகழ்த்தியுள்ளார். இவர் கவிஞர், நடிகர், நாடகாசிரியர் என்பதுடன் அகராதி தொகுப்பாளருங் கூட. இயற்றமிழ்ப்போதகாசிரியர் கலைமாணி (B.A.) என்றுதான் தம்மைத்தமது நூல்களில் அக்காலத்தில் குறிப்பிட்டுக் கொள்வார். இவரது பாண்டவர்கதை எனும் நூல் 1939-1953 வரை எட்டுப்பதிப்புகளையும், (1955- 1962) வரை நான்கு மறு பதிப்புகளையும் கொண்டு, மொத்தம் 25000 பிரதிகள் விற்பனையாகியவை. இந்த நூலைத் தமது இளமையிலே நடந்த அனுபவத்தின் அடிப்படையில் எழுதித் தமது குடும்பத்தினருக்கே சமர்ப்பித்தமையினை அவரது அந்த நூலின் முன்னுரையில் வரும் அவரது பின்வரும் உருக்கமான கூற்றுக் காட்டுகின்றது.

"பாரதக் கதையை நாடகமாக நடித்துக் காட்டியதை யான் முதன்முதற்கண்ட போது எனக்கு வயது எட்டு. அதன்பின் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் எனக்கு நேரே மூத்த சகோதரனார் சோம சுந்தரனாரும், என் தங்கை சிவபாக்கியவதியும், எந்தையார்- யாயாருக்கு (தந்தை-தாய்) முன்பு நடித்துக் காட்டினோம். எந்தையாரும் யாயாரும் என்னையொழிந்த அவர் பிள்ளைகளும் என்னை உலகிலிருத்திவிட்டுப் போய்விட்டனர். அவர்கள் ஞாபகார்த்தம் இச்சிறுநூலைச் சமர்ப்பிக்கின்றேன்." **(வெகுதானியவருடம்-மாசி மாதம்)** சிறுவர் சிறுமியருக்காக எழுதப்பட்ட இந்த வசனநூல் 1961 ஆம் ஆண்டு இலங்கைப் பாடசாலைகளில் உபபாட புத்தகமாக உபயோகப்படுத்துவதற்கென பாடநூற்பிரசுர ஆலோசனைச் சபைச் செயலாளரது அங்கீகாரத்தைப் பெற்றதொன்றாகும். முதல்நூல், வழிநூல்,சார்புநூல் எனும் வகைகளிலே சார்புநூலாக விளங்கும் இந்நூலை பிரான்ஸிஸ் கிங்ஸ்பரியவர்கள் தாம் எழுதியமைக்கான காரணத்தையும் முன்னுரையிலே குறிப்பிடுகின்றார். பாரதக்கதையினை **கத்திய ரூபத்தில்** (வசனநடையில்) செய்த பலர் இயற்கைக்கு மிஞ்சியும் மாறுபட்டுமுள்ள கதைகளை மெய் போல எழுதியமையாலும் சிறுவர்கள் கற்கலாகாத கதைகளை அந்நூலிலே சேர்த்தமையாலும் இவற்றை நீக்கியவகையில் இந்நூல் எழுதப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப்பல்கலைக்கழக மட்டத்திலான நாடகவரலாறு பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களின் மனோன்மணி நாடக நூலிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. **பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை** (1855-1897) அவர்களது செய்யுள் வடிவிலான மனோன்மணீயம் நாடகநூல் தமிழில் நாடகமில்லாக் குறையினைப் போக்க எழுந்தது எனும் வகையில் முக்கியம் வாய்ந்ததொன்றாகும். இந்நூல் ஆங்கிலத்தில் முதன்முதலில் எழுதப்பட்ட மறை (இரகசியமான) வழி(**Secret Way**) என்னும் ஆங்கிலக் கதை நூலின் வழி நூலாம். சுந்தரம்பிள்ளையின் நூலினை மூலமாகக் கொண்டு, அதன் வழிநூலாக நடிப்பதற்கும், படிப்பதற்குமான வசன நாடகநூலாக, "எவருக்கும் விளங்கும் தெள்ளியநடையில்" எழுதப்பட்டதுதான் இவரது **"மனோன்மணி"** என்பதாகும். நாடகம் என்பது **நாடு,அகம்** என்று பிரித்து நாட்டிலுள்ளவர்களின் அகத்தை ஈர்க்கும் சக்தி வாய்ந்தது என்பதனையும் மனம்கொண்டு, தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் எழுதப்பட்டது என்பதனை அவரது பின்வரும் கூற்றுப் புலப்படுத்துகின்றது. "நாடகக்கருத்தா இயற்றமிழ் வடிவில் இயற்றமிலிலக்கணம் சிதையாது நூல் செய்தல் வேண்டும் என்ற கட்டுக்கு உட்பட்டவன் அல்லன். உலகவழக்குப் பேச்சையே தன் நூலுள் கொள்ள இடம் பெற்றவன் ஆயினும் மனோன்மணீயக் கதையில் வரும் ஆடவரும் அரிவையரும் உயர் குடிப்பிறப்பும் கல்வி நலமும் பெற்றவராகலின் அவர் வாய்ப்பேச்செல்லாம் உயர்நடைக்கும் இழிந்தநடைக்கும் இடையே கற்றவர் இயல்பிற் பேசும் பேச்சிலே வரைந்துள்ளேன்." **(மனோன்மணிநாடகம்,1950, முன்னுரை,ப.iii)** இந்தநூல் அதன் முக்கியத்துவம் கருதி சிலகாலம் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்பினருக்குப் பாடநூலாக இருந்ததாக **வித்துவான் க. சொக்கலிங்கம்** (1930-2004) தமது "மனோன்மணி" (1958) உரைநடை நூலில் குறிப்பிட்டுள்ளார். எட்டாம் வகுப்புக்கு பாடநூலாகக் கொள்ளத்தக்கதென்று பண்டிதமணியினால் (19.7.58) விதந்துரைக்கப்பட்ட சொக்கலிங்கம் அவர்களின் மனோன்மணி நூலினை பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களின் நூலுடன் இணைத்துக் கற்பவர்கள் பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளையின் நூலினை உள்ளபடி படித்துப் பயன்பெறக்கூடும். 1950 இல் வெளிவந்த அழகசுந்தரனாரின் மனோன்மணி நாடக நூலுக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அக்காலத்தில் பதிவாளராகவிருந்த **A.M.K. குமாரசுவாமி** அவர்கள் அரியதொரு மதிப்புரையினை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது 'ஏசுவரலாறு' எனும் நூலை யாம் பாரத்ததில்லை. அந்நூலில் "கடவுள் வாழ்த்தாக "மாசில் வீணையும்" என்ற தேவாரத்தையும், ஈற்றில் "மெய்தான்அரும்பி" என்ற திருவாசகத்தையும் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அவர் சமரச மனப்பான்மையினையும் சைவத் திருமுறைகளில் அவருக்கிருந்த (பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி) ஈடுபாட்டுடையும் உணர்ந்து கொள்ளலாம்." **(ஏழாலை,1977,ப.26)** என்று **ஆத்மஜோதி நா. முத்தையா** (1918-1995) குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரால் எழுதப்பட்ட "நாசரேத்தின் யேசு" என்ற நூலில் இயேசுபிரானின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியாகிய "உயிர்த்தெழுதல்" எழுதப்படாத காரணத்தால் இவர் மீது விசாரணை நடத்தப்பட்டு 1927 இல் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரியின் குருப்பட்டம் மீளப்பெறப்பட்டதாகவும், ஆனால் இங்கிலாந்திலுள்ள ஏகத்துவத்திருச்சபை இவரைப் போதகராக ஏற்றுக் கொண்டதாகவும் யாழ்ப்பாணத்து எஸ்.ஜெபநேசன் அவர்களும் (**யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவக் கவிஞர்களும் கீர்த்தனைகளும்,ப.45)** எழுதியுள்ளார்.

பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்கள் தமது தந்தையைப் போன்று தலைசிறந்த கவிஞருங் கூட என்பதனை அவர் தொடர்பாக எழுதப்பட்ட பல கட்டுரைகளிற் பார்த்திருக்கின்றோம். சான்றுக்கு இங்கே ஒரு பாட்டைக் காட்டலாம். அழக சுந்தரனார் தமது மகள் ஒருவருக்குத் தமது தந்தையாராகிய சி.வை.தா. அவர்கள் 'கமலம்' என்று பெயர் வைத்தமையினை நினைவுப்படுத்தி சி.வை.தா. வியோகமானபோது, மகன் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்கள் பாடிய பாடல் ஒன்று பின்வருமாறு:

"மன்னு கமலமென வைப்பாயொரு பெயரை
உன்னுடைய பிள்ளைக்கென் றோர் கடிதம் நீ வரைந்தாய்
மன்னுங் கமல மவள் வாய் திறந்து தாதா வென்
றுன்னை அழைக்கின்றாள் ஒழித் தெங்கே சென்றாய் நீ"

**(முத்துச்சாமி, தி.க.,(1993), எங்களூர் ஏழாலயவூர்,ப.209.)**

தமிழகராதித் தொகுப்பிற்கும் இவராற்றிய பணி குறிப்பிடப்பட வேண்டியதொன்று. "1924 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலே தமிழ் அகராதிக் குழுவினர்களுள் இவரும் (பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி) துணை ஆசிரியராக நியமனம் பெற்று இரண்டு ஆண்டுகள் வரை பணியாற்றிக் கொண்டிருந்தார்." என்று தென்புலோலியூர் மு.**கணபதிப்பிள்ளை ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் (1967,ப.79.)** எனும் நூலிற் குறிப்பிட்டார்.

நாவலரின் அருமை பெருமைகளை உள்ளூர உணர்ந்தவர்களில் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களும் முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் என்பதனை அவரால் **"ஆறுமுகநாவலர்"** என்ற தலைப்பில் அவரால் எழுதப்பட்ட பொருள்பொதிந்த கட்டுரையினைப் படித்துப்பார்த்தபோது புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அக்கட்டுரையின் ஓரிடத்தில் "ஆறுமுகநாவலர் பிறந்து, வளர்ந்து, தொண்டுசெய்த காலம் யாழ்ப்பாணத்திற்கு நல்லகாலம். நாவலர் பிறந்திலரேல் இன்று யாழ்ப்பாணத்திலே சைவ சமயம் இருக்குமோ? யாழ்ப்பாணத்துத் தமிழ் எப்படிப்பட்ட தமிழாய் இருக்கும்" **(நாவலர் நினைவு மலர்,2016, கார்த்திகை 2ஆம் மீள்பதிப்பு, குமரன் புத்தக இல்லம்,ப.94.)** எனும் இவரது நாவலர் பற்றிய கூற்று சி.வை.தா அவர்களின் ''நல்லை நகராறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழெங்கே,சுருதி யெங்கே...." என்று தொடங்கும் பாடலை ஞாபகப்படுத்துவதாயிருக்கின்றது. இ∴து இவ்வாறிருக்க, "தமது பதினொராவது வயதிலேயே, தந்தையார் ஆறுமுகநாவலரை விழுந்து வணங்குமாறு பணிக்க அவ்வாறு செய்யமறுத்து நாவலர் மடிமீது ஏறியிருந்து தோடம்பழம் பரிசில் பெற்ற அழகுசுந்தரர், மறையும் வரை எவருக்கும் அடிபணியாமலே வாழ்ந்தார்." என்று ஒருவர் (உரிய நூலைக் குறிப்பிட விரும்பவில்லை) எழுதி இருப்பதிலே நாவலருடன் தொடர்புக்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் "காலமும் கருத்தும்" என்பதற்குப் பொருத்தமற்றதாக உள்ளது. ஆறுமுகநாவலர காலம் **1822.12.18 - 1879.12.05** ஆகும். இதனையும் கருத்திற்கொள்ளாது புனைந்து எழுதப்பட்ட சம்பவமே மேற்கூறிய கூற்றாகும்.

"எங்களூர் ஏழாலையவூர் எனும் நூலில் ஊ.று. தாமோதரம்பிள்ளையவர்கள் தொடர்பான கட்டுரையிலே வரும் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகரின் "வேரும் விழுதுகளும்" (வம்சவிருட்சம்) தொடர்பான படத்திலே, பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அவர்களின் மகள்மாரில் ஒருவரான திருமதி. கார்த்தி- சுநள.து.று.யு கதிர்காமர் வழியில், ராஜன் கதிர்காமர், வண.நேசன் கதிர்காமர் ஆகிய இருவரையும் (ப.193) காட்டியுள்ளார். இ∴து அழகசுந்தரனார் தொடர்பான மேலதிகமான வரலாற்றுத் தகவல்களை அறிந்து வெளிக்கொண்டு வருவதற்கும் அவரது நூல்களை மீள்பதிப்புச் செய்வதற்குமான ஒரு அரிய தகவலாகும். இக்கட்டுரைவழி அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியினை ஏழாலை வாழ் மக்களும் மேற்கொள்ளலாம். மேலும் சி.வை. தாமோதரம்பிள்ளை, அழகசுந்தர தேசிகர் ஆகியோர் தொடர்பான தமது விசுவாசத்தைக் காண்பிப்பதற்கான அரிய சந்தர்ப்பமும் ஆகும் .

**உசாத்துணை நூல்கள்:**


- கணபதிப்பிள்ளை.மு.,(1967),**ஈழநாட்டின் தமிழ்ச்சுடர்மணிகள்,** பாரிநிலையம்,சென்னை.
- சொக்கலிங்கம்,க.,(1958), மனோன்மணி, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
- பிரான்சிஸ்கிங்ஸ்பரி,(1950),**மனோன்மணிநாடகம்,** இலங்காபிமானி அச்சியந்திரசாலை, சாவகச்சேரி.
- ..................................., (1953), **பாண்டவர் கதை (எட்டாம்பதிப்பு),** இலங்காபிமானி அச்சியந்திரசாலை.
- ..........................,(1957),**பாண்டவர்கதை**,(புதுக்கிய பதிப்பு).
- ..........................,(1962), **பாண்டவர்கதை**,(புதுக்கிய பதிப்பு).
- முத்துச்சாமி.தி.க.,(1993), **எங்களூர் ஏழாலயவூர்**, குறிஞ்சி பதிப்பகம், சென்னை.
- முத்தையா.நா.,**ஏழாலை,**(1977,(முதற்பதிப்பதிப்பு), ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.
- ஜெபநேசன்.எஸ்.,(1994), **யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவக் கவிஞர்களும் கீர்த்தனைகளும்,** தென்னிந்திய திருச்சபை யாழ்.ஆதீனம், வட்டுக்கோட்டை, இலங்கை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பண்பாட்டில் வீதியோர மடங்கள்

முற்காலத்தில் நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்பவர்களின் வசதிக்காகப் வீதிகளை அண்டி அமைக்கப்பட்ட மடங்களே வீதியோர மடங்கள் எனலாம். 20 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மோட்டார் வண்டிகளும், தொடர்வண்டிகளும் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன் மக்கள் நடந்தும் மாட்டு வண்டிகளிலுமே பயணங்களை மேற்கொண்டனர். அக்காலத்துப் போக்குவரத்து மிக மெதுவானது. இன்று சில நிமிடங்களே எடுக்கக்கூடிய பயணங்களுக்கு அக்காலத்தில் பல மணிநேரங்களைச் செலவிட வேண்டியிருந்தது. தொலைதூர இடங்களை இணைக்கக்கூடிய வீதிகளில் நீண்ட தூரம் பயணம் செய்பவர்கள் களைப்பாறுவதற்கும் வண்டில் மாடுகளுக்கு ஓய்வு கொடுக்கவும் வீதியோர மடங்கள் பெரிதும் உதவின.

யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட காலமாகவே வீதியோர மடங்கள் பயன்பாட்டில் இருந்திருக்கக்கூடும். எனினும், குடியேற்றவாதக் காலத்துக்கு முந்திய இவற்றின் இருப்புக் குறித்த நம்பத்தகுந்த சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தெருவோர மடங்கள் பல இருந்ததற்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. அக்காலத்து நிலப்படங்கள் சில, தெருவோரங்களில் மடங்களைக் குறித்துக் காட்டுகின்றன. இவற்றுட் சிலவற்றை மடம் என்றும் வேறு சிலவற்றை அம்பலம் என்றும் பெயர் குறித்துள்ளனர். ஒல்லாந்தரின் நிலப்படங்களில் காணக்கூடியதாக உள்ள இவ்வாறான 20 இடங்களில் 12 ஐ வெறுமனே அம்பலம் என்று குறித்துள்ளனர். எஞ்சியவற்றுள் 7 மடங்கள். இவற்றைப் பொதுவாக "மடம்" என்று மட்டும் குறிப்பிடாமல், நீரெய் மடம், வல்லிய மடம், கல் மடம், அராலி மடம், வேலணை மடம், புங்குடுதீவு மடம், தச்சன் மடம் எனச் சிறப்புப் பெயர்களால் குறித்துள்ளனர்.

மேற்படி நிலப்படங்களின்படி நல்லூர், அரியாலை, நாவற்குழி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வல்லை, உடுப்பிட்டி, கரவெட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி, அராலி, வேலணை, காரைநகர், புங்குடுதீவு, குறிகட்டுவான் ஆகிய இடங்களில் தெருவோரங்களில் மடங்கள் அல்லது அம்பலங்கள் இருந்துள்ளன. இவற்றுட் சில, வீதிகளை நீரேரிகள் குறுக்கிடும் இடங்களிலும், தீவுப் பகுதிகளுக்கான படகுப் போக்குவரத்து இடம்பெறும் இடங்களிலும் காணப்படுகின்றன. நல்லூரில் அரசடி வீதியை அண்டி அம்பலம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இவ்விடத்திலேயே அண்மைக் காலம் வரை செல்லப்பிள்ளையார் மடம் இருந்தது. இந்த மடம் ஒல்லாந்தர் காலத்தில் இருந்த மடத்தின் தொடர்ச்சியா என்பது ஆய்வுக்குரியது.

பிரித்தானியர் காலத்தில் தெருவோரங்களில் பல மடங்களைக் கட்டியதாகத் தெரிகின்றது. பேர்சிவல் அக்லண்ட் டைக் என்பவர் யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் (1829 - 1867), பல நல்ல தெருக்களைத் திறந்து அவற்றின் இரு பக்கங்களிலும் வழிச்செல்வோர் தங்கிச் செல்வதற்கு மடங்களும் நீருண்ணக் கிணறுகளும் அமைத்ததாகக் க. வேலுப்பிள்ளை, அவரெழுதிய யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். தனிப்பட்டவர்களும் பொது நன்மைக்காக இவ்வாறான மடங்களை அமைத்ததற்குச் சான்றுகள் உள்ளன. இப்போதும் பகுதியாக எஞ்சியுள்ள ஆனைக்கோட்டை ஆறுகால் மடம், பருத்தித்துறை தெருமூடி மடம், அண்மைக் காலம்வரை இருந்து இப்போது முற்றாக அழிந்துபோன கோப்பாய் பூதர் மடம் முதலியவை பிரித்தானியர் காலத்துக்கு உரியவையே. ஒரு வீதியோர மடத்தொகுதியில் பெரிய நிழல் மரம், நீர் மூலம், மடக் கட்டடம், சிறிய கோயில், சுமைதாங்கி, ஆவுரோஞ்சிக்கல் ஆகிய கூறுகளைக் காணமுடியும்.

## நிழல் மரம்

பெரும்பாலான தெருவோர மடங்கள் பெரிய நிழல் மரங்களை அண்டி அமைந்திருந்தன. முன்னர் குறிப்பிட்ட ஒல்லாந்தர்கால நிலப்படங்களில் அம்பலங்கள்.'. மடங்களைக் குறிக்கும்போது குறியீடாக ஒரு மரத்தையும் அதனருகே சிறிய கட்டடம் ஒன்றையும் வரைந்துள்ளனர். இதிலிருந்து ஒரு தெருவோர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத் தொகுதியில் நிழல் மரத்துக்கு இருந்த முக்கியத்துவம் புலனாகிறது. தொடக்கத்தில் வீதியோரங்களில் இருந்த பெரிய மரங்களையே களைப்பாறுவதற்கான இடமாக வழிப்போக்கர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும். காலப்போக்கில் இவ்விடங்களிலேயே மடக் கட்டடங்கள் உருவாகியிருக்கலாம்.

## நீர்மூலம்

வீதிகளில் பயணம் செய்யும் மனிதர்களுக்கும் அவர்களுடைய வண்டில் மாடுகள் குதிரைகள் போன்ற விலங்குகளுக்கும் குடிப்பதற்கு நீர் தேவை. சிலவேளைகளில் நீண்ட பயணக் களை தீரக் குளிப்பதற்கும் நீர் தேவையாக இருந்தது. தொடக்கத்தில் இயற்கையாக அமைந்த குளங்கள் வழிப்போக்கர்களின் நீர்த்தேவையை நிறைவு செய்தன. தெருவோரங்களில் இவ்வாறான குளங்கள் இல்லாத இடங்களில் செயற்கையாகக் கேணிகளையும் கிணறுகளையும் வெட்டி நீர் பெறுவதற்கு வழிசெய்தனர். முன்னர் மடங்கள் இருந்து அழிந்துபோன பல இடங்களில் கேணிகளும் கிணறுகளும் எஞ்சியிருப்பதை இன்றும் காணமுடியும்.

## மடக் கட்டடம்

மடக் கட்டடங்கள் அவற்றின் செயற்பாடுகளுக்கு ஏற்ப எளிமையானவையாகவோ கூடுதல் வசதிகளை உள்ளடக்கிய சற்றுப் பெரிய கட்டடங்களாகவோ இருக்கலாம். எளிமையான கட்டடங்கள் மேடைபோல் அமைந்த தரைத் தளத்தின் மேல் அமைந்த தூண்களையும், அவற்றின் மேல் தாங்கப்பட்ட கூரையையும் கொண்ட நாற்புறமும் திறந்த அமைப்புகள். இவை இருப்பதற்கும் படுத்துத் தூங்குவதற்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டவை. தொடக்கத்தில் இக்கட்டடங்கள் மண் தரை, காட்டுமரத் தூண்கள், ஓலைக் கூரை ஆகியவற்றால் ஆனவை. காலப்போக்கில் கற்கள், சுண்ணாம்புச் சாந்து, கூரை ஓடுகள் போன்ற நீடித்து உழைக்கக்கூடிய கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தி மடங்களைக் கட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில்

பெரும்பாலான மடங்களில் அல்லது அவற்றை அண்டி வழிபாட்டுக்கான வசதிகள் இருந்தன. எளிமையான மடங்களில் அயலிலிருந்த மரங்களுக்குக் கீழ் கல், சூலம் போன்ற அடையாளங்களை வைத்து வணங்கினர். சற்றுப் பெரிய மடங்களில் கட்டடங்களுக்கு உள்ளேயே பிள்ளையார் போன்ற கடவுளருக்குச் சிறிய கோயில்கள் இருந்தன. மடங்களின் தேவை இல்லாமலானபோது பல இடங்களில் இக்கோயில்கள் தொடர்ந்தும் வழிப்போக்கர்கள் வணங்கிச் செல்லும் இடங்களாக இருப்பதைக் காணமுடிகின்றது. முறிகண்டி, வல்லை ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் இவ்வாறானவை.

## சுமைதாங்கி

தலையிலோ தோளிலோ பாரமான சுமைகளைக் கொண்டுவரும் வழிப்போக்கர்கள் பிறர் துணையின்றி அச்சுமைகளை இறக்கி வைப்பதற்கு உதவும் அமைப்பே சுமைதாங்கி. ஏறத்தாழ இரண்டு அடி தடிப்பும் ஆறு அடி நீளமும் கொண்ட சிறிய சுவர்போல் அமைந்த இதன் மேற்பகுதி மூன்று வெவ்வேறு மட்டங்களில் அமைந்திருக்கும். நடுவில் அமைந்த உயரமான பகுதி தலையில் சுமையைக் கொண்டு வருபவர்கள் இலகுவாக இறக்கி வைக்கக்கூடிய உயரமானது. ஏனைய இரண்டும் உயரம் குறைந்தவர்கள் அல்லது தோளில் சுமையுடன் வருபவர்கள் பயன்படுத்த உகந்தது.

## ஆவுரோஞ்சிக்கல்

மாடு முதலிய விலங்குகள் தினவெடுக்கும்போது தமது உடம்பைத் தேய்த்துக்கொள்வதற்கான ஒரு அமைப்பு இது. வைரச் சுண்ணாம்புக் கல்லிலிருந்து உருளை வடிவில் கரடு முரடான மேற்பரப்புக் கொண்டதாக இது செய்யப்பட்டிருக்கும். விலங்குகளுக்கான நீர்த்தொட்டிக்கு அருகில் நிலத்திற் குழி தோண்டி நிலைக்குத்தாக நிறுத்தப்பட்டிருக்கும்.

இவ்வாறு மனிதருக்கும் விலங்குகளுக்கும் தேவையான வசதிகளை வழங்கும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியோர மடங்கள் யாழ்ப்பாணப் பண்பாட்டின் ஒரு காலகட்டத்தின் வெளிப்பாடுகள் எனலாம். தெருவோர மடங்களின் தேவை இன்று அற்றுப்போய்விட்டாலும், அவை நமது மரபுரிமைச் சின்னங்கள் என்ற வகையில் இன்றும் முக்கியத்துவம் கொண்டவை. பல மடங்கள் இன்று முற்றாக அழிந்துவிட்டன. சிலவற்றின் பகுதிகளை இன்றும் ஆங்காங்கே காண முடிகிறது. அவற்றையாவது பாதுகாத்து வைத்திருக்கவேண்டியது நமது கடமை.

**இ. மயூரநாதன்**
கட்டடக்கலைஞர்







27.09.2023 இலக்கிய விழாவும், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் ஆக்கங்களை கொண்டமைந்த புலவரகம் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபக உத்திகள்

மனிதனிடம் காணப்படும் அற்புத பண்பாக ஞாபகம் அமைகிறது. கற்றல் கற்பித்தல் நினைவூட்டல் செயற்பாட்டில் ஞாபகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. பரீட்சைகள் மதிப்பீடுகள் மூலம் ஒருவரின் ஞாபகசக்தியே சோதிக்கப்படுகிறது. ஞாபகத்திறன் கூடியவர் கெட்டித்தனம் உடையவராக கருதப்படுகின்றார். தற்காலத்தில் ஞாபகசக்தியை வளப்படுத்துவதிலுள்ள இரகசியங்களை ஆராயத்தொடங்கியுள்ளனர். ஞாபகம் மூன்று வகையாக கருதப்படுகின்றது.

01. குறுங்கால ஞாபகம் ( Short term memory)
02. நீண்டகால ஞாபகம் ( Long term memory)
03. செயற்படு ஞாபகம் ( Working memory)

எமக்கு சூழலிலிருந்து புலனங்களினூடாக கிடைக்கும் தகவல்கள் குறுங்கால ஞாபகமாகவும் ஆர்வம் மீண்டும் மீண்டும் தகவல் கிடைத்தல் மூலம் நீண்டகால ஞாபகத்திற்கும் எடுத்துச்சென்று சேமிக்கப்படும். இவை சரியாக கிடைக்க வேண்டிய நேரத்தில் மூளையிலிருந்து மீளெடுக்கும் ஆற்றலும் ஞாபகத்திறனாகவே கொள்ளப்படுகின்றது. தற்கால யுகத்தில் நாம் பல வழிகளில் அதிக தகவல்களை பெறுகின்றோம். அவை எல்லாவற்றையும் எளிதில் ஞாபகப்படுத்தி கொள்ளமுடிவதில்லை. நாம் சூழலில் இருந்து பெற்றக்கொள்ளும் தகவலின் இயல்பையும் அளவையும் மாற்றுதல் சேமித்தல் தேடியறிதல் அவற்றை தேவையான சந்தர்ப்பத்தில் அறிவை வெளிப்படுத்தல் போன்ற செயல்களை நிறைவேற்றுகின்றன. இவ்வாறு தகவல்களை சேமிக்கும்போது ஒழுங்குமுறையாக தொடர்புபடுத்தி எளிய வடிவில் சேமிக்கும் முறையை ஞாபக உத்திகள் என்கிறோம்.

### 01. மீளவலியுறுத்தல்

குறிப்பிட்ட விடயத்தை முதலில் அறிவதுடன் ஞாபகப்படுத்தி குறித்தகால எல்லையில் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. படமாக்கல்

பெற்றுக்கொண்ட தகவலை கருத்து மாறாமல் சிறிய படம் அல்லது சித்திரமாக்கி உருவமாக ஞாபகப்படுத்துவதன் மூலம் அதிக தகவலை ஒன்றாக நினைவுபடுத்தலாம்.

## 03. மனவரைபடம்

இது சித்திரமாக அன்று சொற்கூட்டங்களை கொண்டு ஒழுங்குபடுத்தும் வரைபடம் சொற்கூட்டங்களுக்கிடையான தொடர்பை சரியாக காட்டும் இடைத்தொடர்புகளை குறித்து நிற்கவேண்டும்.

## 04. உண்மைச் சம்பவங்கள்∴ நடைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்

கோட்பாடுகள் கொள்ளைகள் கற்கும்போது அவற்றை யதார்த்த வாழ்க்கை உதாரணங்களுடன் ஒப்பிட்டு நினைவுபடுத்தல் இலகுவானது.

## 05. சொந்த மொழி நடையில் பயன்படுத்தல்

விதிகள் கோட்பாடுகளை கற்கும்போது அவறடறின் உட்கருத்தை முழுமையாக புரிந்து உங்களது சொந்த சொற்களை பயன்படுத்தி சுயமாக எழுதிக்கொள்வதன் மூலம் மனனம் செய்வதை விட கூடியளவு ஞாபகம் இருக்கும்.

## 06. பாட்டுகள் கவிதைகளாக நினைவூட்டல்

ஆவர்த்தன மூலகங்கள் தாக்கவீத தொடர்பாடுகள் சமன்பாடுகள் போன்றவற்றை நீங்கள் சொந்தமாக இயற்றிய பாடல் அல்லது பிறரால் கூறப்பட்ட பாடல்களாக நகைச்சுவையாக ஞாபகம் வைத்துக்கொள்ளலாம்.

இவற்றில் ஒரு முறையை பயன்படுத்தாமல் அந்த அந்த பாடங்களிற்கு பொருத்தமாக அவரவர் இயலுமைக்கு ஏற்ப தெரிவுசெய்து நினைவாற்றல் வைத்துக்கொள்ளலாம். இவற்றையும் தாண்டி தற்பொழுது ஞாபகசக்திக்குரிய நினைவாற்றல் யோகாசனப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகள் தியானப்பயிற்சிகள் நடைபெறுகின்றன. தினமும் படுக்கைக்கு செல்ல முன் ஒரு நிமிடம் அன்றைய நாள் நடந்த நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி கூறிப்பார்த்தல் மனித நினைவாற்றலை மேம்படுத்தும் என அறியப்படுகின்றது. கல்வி பயிலும் மாணவர்கள் விடயங்களை இவ்வகையில் எளிமையாக நினைபடுத்த பழகினால் கல்வியில் இலகுவாக சித்தி பெறலாம்.

**திரு மு.சின்னராஜா**
நூலகர் (ஓய்வு நிலை)
யாழ் பல்கலைக்கழகம்

**திருமதி நி.வர்மிளா**
ஆசிரியர்





டிஜிட்டல் அறிவு மையத்தினால் நாடாத்தப்பட்ட
புத்தாக்க கண்காட்சி 10,11 - 11.2023 இடம்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் பொதுநூலக டிஜிட்டல் அறிவு மையம் ஒரு கண்ணோட்டம்

இன்றைய காலகட்டத்தில் டிஜிட்டல் அறிவு சமூக மாற்றத்தின் உந்துசக்தியாக மாறியுள்ள நிலையில் ஆசிய மன்றம் (The Asia Foundation) நிறுவனமானது நல்லாட்சிக்கான புத்தாக்க நிறுவனத்துடன் (Centre for Governance Innovation) இணைந்து வலி தெற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் சுன்னாகம் பொதுநூலகத்தில் ஒரு பகுதியாக டிஜிட்டல் அறிவு மையத்தினை (Digital Knowledge Centre) 16ம் திகதி மார்கழி மாதம் 2022ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

இவ் டிஜிட்டல் அறிவு மையமானது 06 பிரிவுகளை உள்ளடக்கியதாக கொண்டு பயனாளர்களுக்கு சேவைகளை வழங்கி வருகிறது. இந்த வகையிலே,

- ❖ டிஜிட்டல் கற்றல் அலகு
- ❖ புத்தாக்க அலகு
- ❖ மெய்நிகர் அறிவு அலகு
- ❖ பொது தகவல் பிரிவு
- ❖ தொழில் வழிகாட்டல் பிரிவு
- ❖ மெய்நிகர் அலுவலகம்

ஆகிய பிரிவுகளை கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் இவ் டிஜிட்டல் அறிவு மையத்தின் செயற்பாடுகளினை இப்பிரதேச மாணவர்கள், இளையோர்களுக்கு அறியத்தரும் வகையில் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளிற்கு நூலக டிஜிட்டல் அறிவு மைய அங்கத்தவர்கள் நேரில் சென்று டிஜிட்டல் அறிவு மைய செயற்பாடுகள் தொடர்பாக கருத்தமர்வுகளை நடாத்தி வருகின்றனர்.

மேலும் இவ் டிஜிட்டல் அறிவு மையத்தின் செயற்பாடுகள் சமூக மட்டத்தில் பரவலாக்கப்படும் முயற்சியாகவும் கற்றறிந்தோர் மூலமாக டிஜிட்டல் அறிவின் முக்கியத்துவத்தினையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கு தெளிவுபடுத்தும் வகையில் ஆசிரிய நூலகர்கள், தொழில்நுட்ப பாட ஆசிரியர்கள் போன்றோருக்கு எமது நூலகத்தில் செயலமர்வுகளை ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றனர். இதன் வாயிலாக ஆசிரிய நூலகர்கள் தமது நூலக செயற்பாட்டினை மேம்படுத்தவும் தொழில்நுட்ப ஆசிரியர்கள் தொழில்நுட்ப அறிவினை மாணவர்களுக்கு கற்பித்துத்தரும் செயற்பாடுகளில் எவ்வாறான உத்திகளை கையாளலாம் என்பது பற்றிய புரிதல்களுக்கு இச்செயலமர்வு வழிகாட்டும் என நம்புகின்றோம். இவ்வாறான செயலமர்வுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறுவயதில் இருந்தே ஒவ்வொருவரும் நூலக பயன்பாட்டினையும் அதன் வாயிலாக டிஜிட்டல் அறிவின் முக்கியத்துவத்தினையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் சிறுவர்களை கவரும் முகமாக சிறார்களுக்கு ஏற்ற அறிவார்ந்த கானொளிகளை வார இறுதி நாட்களில் காட்சிப்படுத்தி சிறுவர்களை மகிழ்வித்துக்கொண்டிருக்கின்றது சுன்னாகம் பொது நூலக டிஜிட்டல் அறிவு மையம்

ஒவ்வொரு மாணவனும் தன்னகத்தே கொண்டுள்ள புத்தாக்க சிந்தனைகளை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தினை நடைமுறைப்படுத்தும் செயற்பாடாக சிறார்களிற்கு புத்தாக்க வழிகாட்டல்களை இவ் டிஜிட்டல் அறிவு மையம் வழங்கி வருகின்றது. இவ்வாறான புத்தாக்க செயற்பாடுகளில் வன்பொருட்கள், மென்பொருட்கள் எவ்வாறு எளிதாக உபயோகப்படுத்தி பல்வேறுபட்ட இயக்கிகளை மற்றும் இயக்க கருவிகளை வடிவமைக்கலாம் என்ற அறிவினை அடிப்படையிலிருந்து மாணவர்களிற்கு விளக்கமளிக்கும் முகமாக ICT ஆசிரியரினால் Arduino தொடர்பான வகுப்புக்கள் வாரம் தோறும் மாணவர்களுக்கு இலவசமாக கற்பிகப்பட்டும் வழிகாட்டப்பட்டும் வருகின்றது. இதன் வாயிலாக மாணவர்களிடையே ஒளிந்து காணப்படுகின்ற புத்தாக்க சிந்தனைகளை தொழில்நுட்ப அறிவினை வெளிக்கொண்டுவர இச்செயற்பாடு உந்துசக்தியாக அமைகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மாணவர்களுக்கு ICT பாடநெறியானது பாடசாலை கற்றல் செயற்பாட்டில் ஒரு கட்டாய பகுதியாக்கப்பட்டுள்ளமையினாலும் ICT அறிவானது சிறுவயது முதலே ஒவ்வொருவரதும் அன்றாட வாழ்நாள் செயற்பாட்டில் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்ட இன்றைய நிலையில் ICT பாட ஆசிரியரினால் வாரம்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களுக்கு அவர்களது தரத்திற்கு (Grade) ஏற்ப பாடரீதியாகவும் மற்றும் பொதுவான ICT அறிவு கற்பிக்கப்படுகின்றது.

மாணவர்கள் தமக்கு ஏற்ற நேரத்தில் எமது நூலக டிஜிட்டல் அறிவு மையத்திற்கு வருகைதந்து ICT தொடர்பான செய்முறைகள் மற்றும் புத்தாக்கம் தொடர்பான செய்முறைகளை தனியாகவோ குழுவாகவோ பரீட்சித்து பார்ப்பதற்காக ஒழுங்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சிறார்கள் Scratch மூலம் சிறுவிளையாட்டுக்கள், காட்டுன்கள், கதைகள், ஆசையூட்டும் படங்கள் போன்றவற்றை உருவாக்க முடியும். இது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என அனைவரும் பயன்படும் வகையில் அமைகின்றது. இவ்வாறான Scratch வகுப்புக்கள் எமது டிஜிட்டல் அறிவு மையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான டிஜிட்டல் அறிவுமைய செயற்பாடுகளின் பிரதிபலனாக புத்தாக்க கண்காட்சி ஆசிரியர் மாணவர்களின் முயற்சியின் விளைவாக சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெற்றது வரவேற்கத்தக்க விடயமாக அமைகின்றது.

இந்த சுன்னாகம் பொதுநூலக டிஜிட்டல் அறிவுமைய வாயிலாக கண்டிப்பாக சிறார்கள், மாணவர்கள், இளையோர், பெரியோர் யாவர்க்கும் இன்றைய தொழில்நுட்ப யுகத்திலே தத்தமது அன்றாட சவால்களை எதிர்கொள்ள தேவையான தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொள்ள ஊன்றுகோலாக செயற்பட்டு வருகின்றமை கண்டு பெருமிதம் கொள்கின்றோம்.

**திருமதி.இ.துளசி**
பொது நூலகம்,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது

வாசிப்பு மனிதனை முழுமையாக்கும் கருவியாக காணப்படுகின்றது. வாசிப்பு ஆனது பல திறன்களை விருத்தி செய்கின்றது. அதாவது ஆக்கத்திறன், படைப்பாற்றல், மொழித்திறன் விருத்தி என்பது போன்ற பற்பல நன்மைகளைச் செய்கின்றது. நாம் சிறு வயதிலிருந்தே வீணாகப் பொழுதுக்களில் நேரத்தைக் கழிப்பதற்குப் பதிலாக நல்ல நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தினை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இன்றைய நவீன தொழில் நுட்ப காலத்திலே வீட்டினில் இருந்து கொண்டே இணைய தளங்களினூடாகப் புத்தகங்களை வாசிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். பரந்துபட்ட உலகில் நடக்கின்ற சம்பவங்கள், நிகழ்ச்சிகள் போன்றவைகளையும் அறிந்து கொள்ளவும் வாசிப்பு உதவுவதாகவே காணப்படுகின்றது. "நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்ற ஔவையாரின் வரிகளுக்கு இணங்க ஒரு மனிதன் எவ்வளவு புத்தகங்களை வாசிக்கின்றானோ அவ்வளவு அறிவினைப் பெற்றுக் கொள்கின்றான். வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான். எமது வாழ்க்கையில் தினமும் வாசித்தல் ஒரு இன்றியமையாத காரணியாகவே காணப்படுகின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு வாசிக்கின்றோமோ அவ்வளவுக்குஅவ்வளவு எமதுஅறிவும் வளர்ச்சி பெறும்.இணைய தளங்களின் வளர்ச்சி காரணமாக இவ்வுலகில் உள்ள அனைத்து மக்களும் இணைய தளங்களிலேயே ஊறிப் போய் இருக்கின்றார்கள். சிறு பிள்ளைகளே இப்பொழுது கைபேசியைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். வாசிப்பினால் அவர்களையெல்லாம் உயர்வடைய வைக்க முடியும் என்பதும் ஒரு குறிப்பிடத்தக்க உண்மையாகும். வீடுகளில் அவ்வளவு சுவாரஸ்யமான கதை புத்தகங்கள் ஒன்றும் இல்லாவிடின் பொது நூலகங்களுக்குச் சென்று எமக்கு பிடித்த புத்தகங்களை வாசிக்கலாம். வாசிப்பு என்பது மிக மிக அருமையான ஒரு கலையாகவும் இன்றைக்கும் அன்றைக்கும் என்றைக்கும் காணப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பினால் உயர்வடைந்தவர்கள் எவ்வளவோ பேர் உள்ளனர். அப்துல் கலாம், மகாத்மா காந்தி, லெனின் என்பவர்கள் அவற்றுள் சிலர் ஆவர். ஏன் மகாத்மா காந்தியினுடைய சத்திய சோதனை எனும் புத்தகத்தை வெளியிட்டவர் கூட வாசிப்பினால் தான் மேன்மையடைந்துள்ளார். வாசிப்பானது சிறு வயதிலிருந்து பெரியவர்கள் ஆனபின்பும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. நாமும் நல்லவற்றையெல்லாம் வாசித்தால் ஒரு நல்ல உயர்ந்த நிலையை அடைய முடியும். வாசிப்பதனால் கிடைக்கும் நன்மைகள் பல உள்ளன. அத்தகைய பயன்களை நாமும் பெறுவோம். இவ்வுலகில் வாழ்வதற்கு மனிதர்களிற்கு வாசிப்பு ஒரு இன்றி அமையாத காரணியாகவும் காணப்படுகின்றது. கடைகளிற்குச் செல்லும் போது அல்லது எங்காவது செல்லும் போது நாம் அங்கே உள்ள துண்டுப் பிரசுரங்கள், விளம்பரப் படங்கள் அல்லது விளம்பர அட்டைகள் என்பவற்றைப் படிப்பதற்கும் வாசிப்பு அவசியமானதாகும்.

மாணவர்களாகிய நாம் எமது தம்பி தங்கை போன்றவர்களிற்கும் வாசிப்பினைப் பழக்கி அவர்களினுடைய முன்னேற்றத்திற்கும் எங்களுடைய முன்னேற்றத்திற்கும் ஒரு ஏணிப் படியாக வாசிப்பை அமைத்துக் கொள்வோம். எதிர்காலத்தின் உடைய தூண்களாகக் கருதப்படுபவர்கள் நாமாவோம். தொலைக்காட்சி, தொலைபேசிஎன்பவற்றைக் கை விட வேண்டும். தொலைக்காட்சிகளில் வரும் செய்திகள் மற்றும் சிறு சிறு கதைகள் என்பவற்றையும் வாசித்துப் பார்க்கலாம் வானொலியில் வரும் செய்தி என்பவற்றைக் கேட்டல், பத்திரிகைச் செய்திகள், பாடல்கள், குறும் வினாக்கள் என்பவற்றையெல்லாம் வாசித்து எம்மை நாமே பலமாக்கிக் கொள்வோம். வாசிப்பினால் ஒருவர் உலகத்தையே சொந்தமாக்கிக் கொள்ளும் அளவிற்கு சக்தி உண்டு நாம் ஒரு விஞ்ஞானப் புத்தகத்தை அதிகமாக வாசித்தால் ஒரு வைத்தியராகக் கூட ஆவதற்கு இடமுண்டு. நாம் ஒரு வைத்தியராகவோ, ஆசிரியராகவோ ஆக விரும்பினால் நன்றாக வாசித்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

**சி.லதுஜா**
யா/இணுவில் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் வலிகாமம் தெற்கு பிரதேசம் சார்ந்த சில பதிவுகள்.

தமிழ் இலக்கியப்பரப்பு மிகப்பரந்தது. இவற்றில் சிற்றிலக்கியங்கள் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. தமிழகம், ஈழம் ஆகிய இரு தமிழ்ப் புலங்களிலும் ஏராளமான சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றில் ஈழத்தில் அறிஞர்களால் பெரிதும் விருப்புடன் வெற்றிகரமாகக் கையாளப்பட்ட இலக்கியமாக இச்சிற்றிலக்கியங்கள் விளங்குகின்றன. தொன்னூற்றாறு வகை எனக் கூறப்படும் சிற்றிலக்கியங்களில் ஈழத்தில் மிக அதிகமாகப் பாடப்பட்டவை பிரபந்த இலக்கியங்களாகும். திருவூஞ்சல், பிள்ளைத் தமிழ், அந்தாதி, சதகம், கலம்பகம், பள்ளு, குறவஞ்சி, கிள்ளைவிடு தூது, இரட்டைமணி மாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, பன்மணி மாலை என அவை விரிந்து செல்கின்றன.

தமிழர்களின் கலாச்சாரப் பண்பாட்டுத் தலைநகராகப் போற்றப்படும் யாழ்ப்பாணம் ஏராளமான அறிஞர்கள் , கலைஞர்களைக் கொண்ட புலமைத்துவம் மிக்க பிரதேசமாகும். இத்தகைய சிறப்பு மிக்க யாழ்ப்பாணத்திலும் காலத்திற்கு காலம் ஏராளமான பல வகைப்பட்ட சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் செய்யுள் வகை இலக்கியங்களாக அமைவதுடன் தமிழிலுள்ள இலக்கண, இலக்கிய யாப்பு மரபுகளை உள்வாங்கி மிகுந்த சொற் சுவையுடனும் , பொருட் சுவையுடனும் படைக்கப்பட்ட இலக்கியங்களாகும். இத்துடன் இவை யாழ்ப்பாணத்தின் பல விடயங்களையும் பேசுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண பிரதேசத்திலிருக்கும் ஊர்கள், அவற்றின் சூழல் , இயற்கைத் தோற்றம், வளம் ஆகியன பற்றியும் அவற்றில் வதியும் மக்கள் , அவர்களின் கலை , கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம், தொழில் ஆகியவை பற்றியும் மிக நுட்பமாகப் பேசுவதுடன் பதிவும் செய்கின்றன.

இவ்வாறாக யாழ்ப்பாணத்திற் தோன்றிய இச்சிற்றிலக்கியங்கள் பல வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களையும் பதிவு செய்யத்தவறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. விவசாயப் பயிர்ச் செய்கைக்குகந்த செம்மண் வளத்தைக் கொண்ட புன்னாலைக்கட்டுவன் அதிக சைவாலயங்களையும், அறிஞர்களையும் கொண்ட ஏழாலை யாழ்ப்பாணத்தில் பெரிய நகரங்களில் ஒன்றான சுன்னாகம், வடஇலங்கையின் பழைய இராசதானிகளில் ஒன்றாகவும், தமிழர்களின் தொன்மை அடையாளமாகவும் விளங்கும் கந்தரோடை, 19ம் நூற்றாண்டில் மகளிர் கல்வியில் துரித வளர்ச்சியை ஏற்படுத்திய பாடசாலையைக் கொண்டமைந்த உடுவில் , நுண்கலைகளின் இருப்பிடமாகத் திகழ்வதுடன் சைவத்தமிழ்ப் பண்பாட்டுச் சூழலையும் தன்னகத்தே கொண்ட இணுவில் என சிறப்புக்குரிய பல ஊர்களையும் , மக்களையும் தன்னகத்தே கொண்ட இணுவில் என சிறப்புக்குரிய பல ஊர்களையும் , மக்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் சிறப்பு வலிகாமம் தெற்கு பிரதேசத்திற்குரியது.

இத்தகைய சிறப்புக் கொண்ட வலிகாமம் தெற்குப் பிரதேசத்தின் பல விடயங்களும் சிற்றிலக்கியங்களைப் படைத்த ஆசிரியர்களையும் அதிகளவில் ஈர்த்துள்ளதென்றே கூறலாம். இதனால் இப்பிரதேசத்தின் ஊர், வளம், சூழல் பற்றியும் இங்கு வசிக்கும் மக்கள், அவர்களின் கலை , கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம், தொழில் மற்றும் இன்னோரன்ன பல விடயங்கள் பற்றியும் இவ்விலக்கியங்களில் ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளதையும் அவதானிக்கலாம். இவ்வாறான சிற்றிலக்கியங்கள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

## (ஊர் பெயர் உட்பொருள் விளக்கம்)

ஊர் பெயர் உட்பொருள் விளக்கம் எனும் இவ்விலக்கியம் செய்யுள் வடிவிலமைந்தது. இது முழுவதுமாக இலங்கையில் வட மாகாணத்திலுள்ள ஊர் பெயர்களை சைவசித்தாந்த உட்பொருட் கருத்துகளுடன் இணைந்து படைக்கப்பட்ட அற்புதமான இலக்கிய வடிவமொன்றாகும். மல்லாகம் நமசிவாயப் புலவரினால் (1860-1942) இருபத்தைந்து செய்யுள்களில் பாடப்பட்ட இவ்விலக்கியத்தினை மேலோட்டமாகப் பார்த்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்களின் பெயர்களை அவதானிக்கலாம். ஆனால் அதன் உட்பொருள் புராண இதிகாசக் கதைகளையும் , சைவசித்தாந்த கருத்துக்களையும் உள்ளடக்கிய பிரபந்த வடிவங்களிலொன்றாக இருக்கும். யாழ்ப்பாணத்திலுள்ள ஊர் பெயர்களை மிக நுட்பமாகப் பதிவு செய்வதில் இச் செய்யுள் இலக்கியம் தனித்துவம் வாய்ந்ததாகும். இவற்றுட் சில பாடல்களில் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தின் சில ஊர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**நாராந்தனையுடையான் பூநகரியினண்ணுடையான்**
**றேருஞ்சுன்னாக முடையானைச் சாவகச்சேரிதுரீ**
**வேர்வந்தள வெட்டி பச்சிலைப் பள்ளிவிளாங்குளம் போய்ச்**
**சேரும் படி செலக்காரைக் காலாள் கையிற்சிக்கினனே.**

(பாடல் 08)

இப்பாடலில் யாழ்ப்பாணத்தின் வேறு பல ஊர்ப் பெயர்களுடன் வலிகாமம் தெற்கின் சுன்னாகம் , காரைக்கால் போன்ற ஊர்ப் பெயர்கள் உள்ளதை அவதானிக்கலாம். எனினும் இப்பாடலில் உட்பொருள் வேறுவகையானது. கைலாயத்தில் வசிப்பவராகிய சிவபெருமான் பக்தி வலையில் அகப்படுவரேயன்றி அகங்காரமுடையவர்களின் கண்களுக்குத் தோற்றமாட்டார் என்பதே இதன் பொருளாகும். இதே போன்று இன்னொரு பாடலில்

**மருதயினாமட மாதுலனஞ்சச் செய்மால் வணங்கி**
**யுருகிவிள்ளா நின்ற மாலையன் விண்டனியூறடையப்**
**பொருதசூராபத்தை பூணக்கை வேலணை செட்டிக்குளம்**
**பெருகுமன் பானந்தச் சம்புத்துறையணை பேறரிதே**

(பாடல் 21)

மகாவிஷ்ணுவும் வணங்குகிற சிவபெருமானது கழலிணைகளை அடைவது சிற்றறிவுடைய எம்போன்றோருக்கு அரிதிலும் அரிதாகும். என்பது இதன் பொருளாகும். எனினும் இங்கு மருதனார் மடம் . சூராபத்தை போன்ற ஊர்ப் பெயர்கள் வந்துள்ளதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கலாம். இவ்விலக்கியத்தின் மற்றைய பாடல்களில் கந்தரோடை, சங்குவேலி , இணுவில் , புன்னாலைக்கட்டுவன, தாவடி போன்ற ஊர்ப் பெயர்கள் உள்ளன.

மேலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி மீது சுன்னாகம் முத்துக்குமாரக்கவிராயர் (1780 - 1852) என்னும் புலவர் பாடிய ஒரு பாடல் நாமாந்திரிகை (ஊர்பெயர் உட்பொருள் விள்க்கம்) எனும் பிரகேளிகை முறையில் அமைந்துள்ளது. தனிச்செய்யுளாக அமையும் இப்பாடலில் மேலோட்டமாகப் பார்த்தால் யாழ்ப்பாணத்தின் ஊர்ப் பெயர்கள் வருவதையும் அதன் உட்பொருள் வேறொன்றுமாக அமைவதையும் காணலாம்.

**மல்லாக மாதகலான் மருகன் சுன்னாகத்தான்**
**மகன்பா வாணர்**
**சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலையானத்தான்**
**கரும்ப ரோதிச்**
**சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்**
**சிகண்டி மாவூர்**
**வல்லானை மாவிட்ட புரநகரத் திடைபடபவனி**
**வரக் கண்டேனே.**

இங்கு மல்லாகம், மாதகல், துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் ஆகிய ஊர் பெயர்களுடன் சுன்னாகம், ஈவினை போன்ற ஊர்ப்பெயர்களும் வந்துள்ளதை அவதானிக்கலாம். எனினும் இதன் பொருள் திருமாலின் மருகரும், சிவபெருமானின் புரத்திருமாகிய முருகப்பெருமான் மாவிட்டபுரம் திருத்தலத்தில் எழுந்தருளி வரும் அருட்காட்சியைக் கண்டு தரிசித்தேன் என்பதாகும்.

## (பிரபந்த இலக்கியங்கள்)

ஒரு ஊரையும் அதன் சிறப்புகளையும் பதிவு செய்வதில் கோவில்சார் பிரபந்த இலக்கியங்களுக்கு முக்கிய இடமொன்றுண்டு. அவற்றிலும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் அதனை அதிகமாகவே செய்துள்ளன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ் பிரபந்தமொன்று கந்தரோடையில் அமைந்துள்ள சிற்றூர்களையும் அதன் குறிச்சிகளையும் மிக அழகாகவும் நுட்பமாகவும் பதிவு செய்கின்றது. இப்பின்ளைத்தமிழ் வித்துவான் இ.திருநாவுக்கரசு (1923-1996) என்பவரால் இயற்றப்பட்டதாக தமிழ்க்கந்தம் எனும் நூல் (1959) குறிப்பிடத்தக்கது.

**வற்றாக்கை யர்வாழ் மடத்தடி விளாங்கனி**
**வளரிக்கி ரானை யுண்ண**
**வளர்சங்கா வத்தைசெல் திசைமாற்ற**
**ஊச்சாப் பனைமருங் கோடி மலிநீர்**
**முற்றா இயங்கம் புலத்தாண்டி மெய்ந்நூல்**
**முழுதுணர் கணக்கர் வளவின்**
**முடுகுநீர் வருடஉரு தோப்பாம் பள்ளம் சேர்ந்து**
**மொழிபாடல் பிழை கண்டதும்**
**கற்றார்தம் அவையிலே கையிற் குடாரையால்**
**கழுத்தற்று மறுக வெட்டும்**
**கவிஒட்டன் கட்டுவளர் இனியா இலந்தைக்**
**கனிவேண்டி மைந்தர் மகளிர்**
**முற்றாரும் செந்நெல் நிறையும் கந்த ரோடைநகர்**
**முன் பொருக்கன் புலமுறும்**
**முற்றிய பருத்தியோ லைக்கின் னருளானந்த**
**மும்மதக் கரிவருகவே** (வருகைப்பருவம்)

இங்கு இப்பாடலில் வற்றாக்கை, மடத்தடி, விளாங்கனை, இக்கிரானை, சங்கவத்தை, உச்சாப்பனை, இயங்கம்புலம், கணக்கர்வளவு, தோப்பாம்பள்ளம், குடாரை, ஒட்டன்காடு, இனியாஇலந்தை, கந்தரோடைநகர், பொருக்கன்புலம், பருத்தியோலை ஆகிய குறிச்சிப் பெயர்கள் வந்துள்ளன.

இணுவில் கந்தசுவாமி கோயில் என அறியப்படும் இணுவில் நொச்சியம்பதிக்கந்தசுவாமி மீது பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் என்பவரால் இயற்றப்பட்ட இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறிப்பிட்ட முருகன் ஆலயத்தின் சுற்றயற் பகுதியில் அமைந்துள்ள ஆலயங்களைப் பதிவு செய்கிறது.

**மஞ்சமொன் றாக்கியே மகிழ்ந்துநின் னருள்பெற்ற**
**மாதவச் சன்யாசியார்**
**வாழ்ந்தமஞ் சத்தடி மாதவத் தலத்திலும்**
**மன்னியருள் புரியும் வேலா,**
**பஞ்சுவளர் பருத்தியடைப் பானபதி செகராசப்**
**பழமன்னன் பண்ட மைத்த**
**பதியமரு வேழமுகன் பாங்கமர்ந் தோய் , அரசன்**
**பரராச சேகரன் தன்னால்**
**மிஞ்சுபழம் உதிருமர, விளாத்தியடி நிறுவுற்ற**
**விநாயகன் அருகில் கொண்டோய் ,**
**விம்முமுலை சுரந்தூட்ட விரைந்தணுகு மண்மையினை**
**வேண்டியிணு வில் அமர்ந்த**
**செஞ்சொலருள் சிவகாமி சிதம்பரநல் வளவிலுள**
**திருக்கோயில் நீங்கிவருவாள்.**
**சிவதேவ கணஞ்சூழுஞ் சீரிணுவைப் பதிவாழுஞ்**
**சேந்தனே முத்தமருளே!**

(மூத்தப்பருவம் பாடல் 03)

இப்பாடலில் மஞ்சத்தடி முருகன் ஆலயம், செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம், பரராசசேகரப்பிள்ளையார் ஆலயம் , சிவகாமியம்மன் ஆலயம் ஆகிய சைவாலயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

ஈழத்துப்பிரபந்த இலக்கியங்களில் ஊஞ்சல் பதிகம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இவ்வூஞ்சல் பதிகங்கள் குறிப்பிட்ட ஒரு ஊரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனைப் போற்றிப் புகழ்வதுடன் இவ்வூரின் செழிப்பிற்கும், வளமான வாழ்விற்கும் அவ்விறைவனே முழுமுதற் காரணம் எனவும் குறிப்பிடும். உதாரணமாக சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விஸ்வநாதசுவாமி திருவூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்புகழும் சுன்னாகப் பதியில் மேவும்
பைந்தமிழ்சேர் மயிலணியாம் கோவில் தன்னில்
சீர்திகழும் கார்த்திகேயக் குருவின் பின்னோர்
சிறப்புடனே வழிவழியாய் அருச்சித் தேக்க
கார்மருவும் கூவிழநல் நிழலில் மேவி
கருதும்அடி யார் இடர்கள் களைந்த நாளும்
தாரணிசூழ் குடவாயிற் கோட்டம் தன்னில்
தவம் அருள் விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல். ( பாடல் 06)

எனவும் மஹாவித்துவான் மா.த.ந.வீரமணிஐயர் (1931-2003) இயற்றிய சுன்னாகம் வருஷப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாள் ஊஞ்சல்.

கமல மலர்ப் கழலினைகள் கருணை யோடு
காசினியில் பத்தருக்கே அருளும் தேவி
குமுத மலர்ச் செவ்விதழில் முறுவல் பூத்துக்
குறை தவிர்த்து வரமருளும் தாயே காளி
அமுதமென நின் புகழைப் பாடி ஏத்தும்
அடியவருக் கினிய தெலாம் அருளும் மாயே
தமிழமுதத் தலைவரு. . . . . புலத்தில் மேவும்
தயாபரியே மஹாமாரி ஆடிர் ஊஞ்சல்.
(பாடல் 08)

எனவும் குறிப்பிடுவதனை அவதானிக்கலாம்.

## (கனகி புராணம்)

கனகி புராணம் எனக் கூறப்படும் ஒரு செய்யுள் இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டில் வண்ணார் பண்ணைச்சிவன் கோவிலில் ஆடல், பாடல்களில் சிறந்து விளங்கிய கனகம்மா என்ற மங்கையொருத்தியைப்பற்றியும் அவளது ஆடல், பாடலைக் கண்டுகளிக்க என யாழ்ப்பாணத்தின் பல ஊர்களிலிருந்தும் வரும் சமூகத்தின் உயர்மட்ட செல்வந்தர்களது நடை, உடை, பாவனை மற்றும் அவர்களது குணாதிசயங்களைப் பற்றியும் நகைச்சுவை கலந்த சிலேடையில் கூறும் இலக்கியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வண்ணார் பண்ணைச்சிவன் கோவிலில் தவில் வித்துவானாக இருந்த நட்டவச் சுப்பையனார் (1820-1896) என்பவரால் இயற்றப்பட்டது. இச்செய்யுள் இலக்கியம் ஐந்து சருக்கங்களைக் கொண்ட 40 பாடல்களை உள்ளடக்கியுள்ளது. இதில் சுயம்வரப்படலத்தின் ஒரு பாடல் உடுவில் ஊரிலிருந்து நங்கையின் நடனத்தைக்கான வந்திருக்கும் மனிதரது குணாதிசயங்களை அவளது தோழியின் வாயிலாக நகைச்சுவை கலந்த சிலேடையில் வர்ணிக்கின்றது.

**மானினைப் பழித்த கண்ணும்**
**வடிவினுக் குவமை யில்லாத்**
**தேனினு மினிய செஞ்சொற் றெரி**
**வையே கனகே கேண்மோ**
**ஊனுணும் பரிதி வேல் வாளொளி**
**பெற விங்கிருப்போன்**
**தானை சூழுடுவில் வாழும் தன் கை**
**யொன்றில்லா வேந்தே.** (சுயம்வரப்படலம் 21)

பொருள்: மானினையும் விட அழகிய கண்களையும். வடிவுக்கு ஒப்புவமையில்லாத தேனினும் இனிய செம்மையான சொற்களையும் பேசும் பெண்ணே! கனகே! கேள் , பகைவரின் ஊனை (இறைச்சி) உண்ணுகின்ற சூரியன் போல ஒளி விசுகின்ற வேலோடும், வாளோடும் இவ்விடத்தில் இருப்பவன் படைகள் புடைசூழப் பெற்ற உடுவிலில் வாழ்கின்ற தனக்கு ஒருகை இல்லாத அரசனாவான்.

சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் (1855-1922) தரவுக் கொச்சகக் கலிப்பாவில் அமைந்த செய்யுளொன்று சுன்னாகம் முருகேச பண்டிதரைப் (1829-1900) பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்**
**முன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்**
**துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர் வாழ் மாணவர்க்குப்**
**புன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முருகேச பண்டிதர் தான் கற்ற தமிழறிவை, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், கோப்பாய் தெற்கு, சிறுப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம், கல்வளை ஆகிய ஊர்களிலுள்ள மாணவாகளுக்கு போதித்தார் எனக் குறிப்பிடுவதுடன் இவ்வூர்கள் எல்லாம் மிகவும் தொன்மையானவை எனவும் கூறுவதைக் காணலாம். இவ்வூர்களிலெல்லாம் இத்தமிழ்ப் பாரம்பரியம் தொன்று தொட்டு இன்று வரை நிலவிவருவதையும் இதன் மூலம் அவதானிக்கலாம். இதே போன்று யாழ்ப்பாணத்திற் தோன்றிய சிற்றிலக்கியங்கள் பலவும் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தையும் அது மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலுள்ள வேறு பல ஊர்களையும் அதன் சிறப்புக்களையும் அவ்வூர்களில் வசிக்கும் மக்களது பண்பாட்டு வாழ்வியற் கோலங்களையும் மிகச்சிறப்பாகவும் நுட்பமாகவும் பதிவு செய்துள்ளதையும் காணலாம்.

**(உசாத்துணை நூல்கள்)**


01. ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம், இ.நமசிவாயம்பிள்ளை, சைவப்பிரகாசயந்திரசாலை இரண்டாம் பதிப்பு 1983

02. சுன்னாகப் வுலவர் பரம்பரை முத்துக குமாரக்கவிராயர், க.சி.குலரத்தினம், வெள்ளிமலை-சுன்னாகம் பொது நூலக வெளியீடு சித்திரை 2011

03. புன்னுதமிழ் சொன்ன மன்னாகத்தான் சுன்னாகப்பண்டிதர் முருகேசன் .சி.ரமே', வெள்ளிமலை-சுன்னாகம் பொது நூலக வெளியீடு சித்திரை 2013

04. குாலத்தை வெனறு நிற்கும் கந்தரோடை Dr.சே.சிவசண்முகராஜா, கில்னர்லேன் யாழ்ப்பாணம் 2013

05. கனகிபுராணம் பதிப்பாசிரியர் மு.இராமலிங்கம், சுதந்திரன் அச்சகம் கொழும்பு 12, 1961

06. இணுவை முருகள் பிள்ளைத்தமிழ் ச.வே.பஞ்சாட்சரம், இளந்தொண்டர் சபை, கந்தசுவாமி கோயில் இணுவில் , இரண்டாம் பதிப்பு 2004

07. திருக்கோயிற்பாமாலை , வெளியீடு மண்டல நாயகம் குடும்பம் 2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுதானியங்களும் அவற்றின் பயன்பாடும்

சிறுதானியங்கள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே எமது உணவுப் பயன்பாட்டிற்காக எமது முன்னோரால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது நாம் அதன் முக்கியத்துவத்தை உணராது மேலைத்தேய உணவுகளுக்கு அடிமையாகியுள்ளோம். இதனால் சிறுவயதிலேயே தொற்றாநோய்களுக்கு உட்படும் சந்தர்ப்பம் கூடுதலாகக் காணப்படுகின்றது. எம்மில் பலருக்கு சிறுதானியங்களின் பெயர்கள் கூட தெரியாமல் இருக்கின்றது. எனவே நாம் சிறுதானியங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதாகும். பொதுவாக சிறுதானியங்களில் எமது உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் காணப்படுகின்றது. அத்துடன் இச்சிறுதானியங்களை தேவையான அளவுகளில் நாம் பயன்படுத்தும்போது அது எமது உடலுக்கு மிகவும் நன்மையளிக்கும். பொதுவாக நாம் பயன்படுத்தும் சிறுதானியங்களை பற்றி பார்ப்போம்

## 01. சாமை **(Little Millet)**

ஏறத்தாள 5000 வருடங்களுக்கு முன்பே தெற்கு ஆசியக்கண்டத்தில் தோன்றியதாக சொல்லப்படுகின்றது. இலங்கை, இந்தியா, நேபாளம், மலேசியா, மேற்கு மியன்மார் போன்ற நாடுகளில் பயிரிடப்பட்டு வருகின்றது.

100g சாமையில் உள்ள ஊட்டச்சத்துக்கள்

| | |
|---|---|
| சக்தி | - 341 Kcal |
| மாச்சத்து | - 67.0 g |
| நார்ச்சத்து | - 7.6 g |
| கொழுப்புச்சத்து | - 4.7 g |
| புரதச்சத்து | - 7.7 g |
| கல்சியம் | - 17.0 mg |
| இரும்பு | - 9.3 mg |
| பொஸ்பரஸ் | - 220 mg |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன் நுண்சத்துக்களான மங்கனீஸ், சோடியம், பொட்டாசியம், மக்னீசியம், துத்தநாகம் போன்றவற்றையும் அடங்கியுள்ளது.

## சாமையின் பயன்கள்

- ❖ பிளவினோட்டுக்கள் காணப்படுவதால் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுவாக்குகின்றது. அத்துடன் கண்புரை ஏற்படுவதை தடுக்கின்றது.

- ❖ நார்ச்சத்து அதிகம் காணப்படுவதால் காபோவைதரேற்றின் சமிபாட்டு நேரத்தை தாமதப்படுத்தி குருதியில் குளுக்கோசின் அளவு மட்டத்தை சீராகபேண உதவுகின்றது. இதனால் இது நீரிழிவு நோய் எற்படுவதை குறைப்பதுடன் நீரிழிவு நோயாளிகளுக்கு நல்ல உணவாகவும் அமைகின்றது.

- ❖ அத்துடன் இந்த நார்ச்சத்து மலச்சிக்கல் பிரச்சினையையும் தீர்க்க உதவுகின்றது.

- ❖ இது குளுட்டீன் இல்லாத நீரில் கரையக்கூடிய நார்ப்பொருள் அதிகம் கொண்டதனால் உணவுக்கால்வாய் தொகுதியை சுத்தமாக வைத்திருக்கவும் உதவுகின்றதுடன் பித்தப்பை கல்லு உருவாக்கத்தையும் தடுக்கின்றது.

- ❖ இதில் காணப்படும் மக்னீசியம் பொட்டாசியம் போன்ற நுண்சத்தானது சீரான குருதியமுக்கத்தை பேணுவதற்கும் இதயத்துடிப்பையும் இதயத்தின் செயற்பாட்டை சீராகப் பேணவும் உதவும். அத்துடன் இதயத்தின் ஆரோக்கியத்தை பேணவும் உதவுகின்றது.

- ❖ சாமையை உணவாக உட்கொள்ளும்போது எமது உடலில் காணப்படும் தேவையற்ற கழிவுகள் அதாவது நச்சுநீக்கம் (Detox) செய்ய உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாமையில் உள்ள கல்சியம் சத்து எலும்புகளுக்கு ஊட்டமளிக்க உதவுகின்றது.

- சாமையில் புரதச்சத்து இரும்புச்சத்து காணப்படுவதால் உடல் கலங்களின் வளர்ச்சி புதுப்பித்தல் மற்றும் உடல் வலிமைக்கு உதவுகின்றது.

- சாமையில் உடலுக்கு நன்மை தரும் கொழுப்புக்கள் அடங்கியிருப்பதனால் இதயம் சம்பந்தமான நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்க உதவுகின்றது.

- அத்துடன் இது குழந்தைகளுக்கு, வயோதிபர்களுக்கு, விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் உகந்த உணவாக காணப்படுகின்றது.

## சாமை அரிசியில் தயாரிக்கும் உணவுப் பண்டங்கள்

1 தோசை
2 ரொட்டி
3 சோறு
4 பொங்கல்
5 வடை
6 அடை
7 கொழுக்கட்டை
8 சாதம்
9 கஞ்சி
10 இட்லி
11 குண்டுத்தோசை
12 களி

## 02. குரக்கன் (Finger millet)

இது ஆபிரிக்கக் கண்டத்தில் உருவானது இலங்கை இந்தியா உகண்டா எதியோப்பியா போன்ற நாடுகளில் பயிரிடப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100g குரக்கனில் உள்ள ஊட்டச்சத்துக்கள்
கலோரி - 307 Kcal
மாப்பொருள் - 53.5 g
நார்ப்பொருள் - 63.6 g
கொழுப்புச்சத்து - 1.9 g
புரதம் - 7.4 g
கனியுப்புக்கள்
கல்சியம் - 344 mg
இரும்பு - 11.3 mg
மக்னீசியம் - 154 mg
பொஸ்பரஸ் - 18.3 mg
சோடியம் - 2 mg
நாகம் - 1.7 mg

## குரக்கனின் பயன்கள்

- இரும்புச்சத்து அதிகம் காணப்படுவதால் குருதிச்சோகை நோய் வராமல் தடுக்க உதவும்

- இதயத்தின் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றது. குரக்கனில் காணப்படும் நார்ச்சத்துக்கள் Vit – B3 குருதியிலுள்ள நல்ல கொழுப்பின் அளவை சீராக (HDL) வைத்திருக்கவும் ரைகிளிசரைடுகளின் (serum triglyceridos) செறிவைக் குறைக்கவும் லிப்பிட் ஆக்சினேற்றம் (lipid oridation) கெட்ட கொலஸ்ரோல் எனும் LDL ஒக்சினேற்றத்தை தடுக்கின்றது. இதனால் குருதிக்குழாய்கள் ஆரோக்கியத்தை பேணுவதுடன் இதயத்துக்கும் ஆரோக்கியத்தை உருவாக்குகின்றது. இதனால் மாரடைப்பு, பக்கவாதம், ஏற்படும் அபாயத்திலிருந்து எம்மை பாதுகாகக் உதவுகின்றது.

- குரக்கனில் காணப்படும் இயற்கையான கல்சியச் சத்தானது (சுண்ணாம்புச்சத்து) எலும்புகளின் உறுதிக்கும் முதிர்ச்சிக்கும் உதவுகின்றது. எனவே இது என்புகளில் ஏற்படும் எலும்புப்புரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Osteoporosis) நிலையை தடுக்கின்றது. இதனால் இது பெண்கள் சிறுவர்களுக்கு மிகவும் சிறந்த உணவு

- ❖ இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதனால் குருதியில் குளுக்கோசின் அளவை சீராக வைக்க உதவுவதால் சர்க்கரை நோய் உடல் பருமன் உடையவர்களுக்கும் மிகவும் நல்லது.

- ❖ அத்துடன் பைரோகெமிக்கல் அதிகம் உள்ளதால் நோய் எதிர்ப்பு மண்டலம் வலுவடையவும் நோய் எதிர்ப்பு சக்தி உருவாக்கவும் மிகவும் உதவும்

- ❖ முக்கியமாக பொலிபினோல், பீனோல் இன் அளவு அரிசி கோதுமையை விட அதிகமாக குரக்கனில் காணப்படுவதனால் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவு, இரத்தத்தில் குளுக்கோஸ் கூடிய நிலை மற்றும் ஒக்சினேற்ற அழுத்தம் ஆகியன கட்டுப்படுத்த உதவுகின்றது. இதனால் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு ஏற்படும் காயம் வேகமாக மாறும்

- ❖ சத்துமிக்க உணவாக காணப்படுகின்றது. அதாவது குரக்கனில் மேலும் குளுட்டின் இன்மை Vit C, Vit E, Vit B Complen, நிரம்பாத கொழுப்பமிலங்கள், Antioridant என்பன காணப்படுகின்றது. இது மேலும் சத்துமிக்க உணவாக அமைகின்றது.

- ❖ குரக்கனின் (தோலில்) உள்ள Antioridant ஆன பீனோலிக் அசிட், பிளவினோட், ரனின் (Phendic acid, Flavonoids and tannins) ஆகியவை காணப்படுவதால் புற்றுநோய், கலங்கள் சேதமடைதல், வயதுமுதிர்ச்சி என்பன தடுக்கப்படுகின்றது.

- ❖ தோலின் ஆரோக்கியத்தை பேண உதவுகின்றது. அதாவது அமினோஅமிலங்கள், புரதங்கள் செறிவாக உள்ளதால் இறந்த கலங்கள் இலகுவாக அகற்றப்பட உதவும். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

acne, pimples, boiles ( தோலில் ஏற்படும் பாதிப்புக்கள்) என்பவை தடுக்க அல்லது சிகிச்சிக்க உதவும். இவற்றுடன் தோலில் ஏற்படும் தழும்புகள், கருநிறம் என்பவற்றை தடுக்க அல்லது நீக்க குரக்கனில் காணப்படும் (Tannin) ரனின் உதவுகின்றது.

❖ குரக்கனை உணவாக அல்லது குரக்கன் மாவை தலைக்கு பூசும்போது தலைமுடி உதிர்வை தரும்.அத்துடன் கரட்டினொய்ட், அமினோஅமிலங்கள் காணப்படுவதால் முடியின் வளர்ச்சியை கூட்டவும் உதவும்

❖ குரக்கனில் நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் காணப்படுவதால் பொடுகுக்கு தலைக்கு பூசும் போது நல்ல தீர்வை தரும்.

❖ குரக்கனில் உள்ள அதிக உயிரியல் மதிப்பு வாய்நத புரதத்தின் கூறாகிய எலுசினின் (eleusinin), ரைடோபன் (tryptophan), சிஸ்டைன் (cystine), மெத்தியோனின் (methionine) மற்றும் வாசனைமிகு அமினோஅமிலங்கள் முழுமையாக உள்ளன. இவை அனைத்தும் உடல் ஆரோக்கியத்தை பேண உதவுகின்றது.

## குரக்கனில் தயாரிக்கும் உணவுகள்

1. பிட்டு
2. களி
3. தோசை
4. கஞ்சி
5. இடியப்பம்
6. ரொட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. வரகு (Kodo millet)

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பயிரிடப்படும் பனிவரகு (Prosomillet) என்ற வகையும் பயன்பாட்டில் உள்ளது.

100 g வரகில் உள்ள ஊட்டச்சத்துக் கூறுகள்

புரதம் - 8.3 g
மாப்பொருள் - 65.9 g
கொழுப்பு – 1.4 g
கனிப்புக்கள் - 2.6 g
நார்பொருள் - 9 g
கல்சியம் - 27 mg
பொஸ்பரஸ் - 188 mg

Vit – B (Niacin> B6) – 23.1g இவற்றுடன் Folic acid, பொட்டாசியம், நாகம், மக்னீசியம் ஆகியவையும் காணப்படுகின்றது.

- நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் அதிக உடல் எடை உள்ளவர்களுக்கும், மாதவிடாய் நின்ற பெண்களுக்கும் மிகவும் நல்லது. உடல் எடையைக் குறைக்க உதவும். ஆத்துடன் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறைக்க அல்லது சீராக்கி நீரிழிவைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் நார்ச்சத்தானது குடற்புண்கள் ஆறவும், மலச்சிக்கலைத் தடுக்கவும் உதவுகின்றது.

- ஊட்டச்சத்துக்கள் நிறைந்திருப்பதால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை வழங்கவும் உடல் ஆரோக்கியமாக வாழவும் வரகரிசி உதவுகின்றது.

- வரகு அரிசியில் காணப்படும் Antioxidant,Polyphenols, tinnins, Phosphorous, Phytic acid என்பன அதிகமாக காணப்படுவதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும், இருதய நோய்கள், உயர்குருதி அமுக்கம், கொலஸ்திரோல் என்பன வருவதை தடுத்து இருதய ஆரோக்கியத்தைப் பேணவும் உதவுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ குட்டின் இன்மையால் குடல் ஆரோக்கியத்தைப் பேணவும், குடலின் ஆரோக்கியம் தரும் பக்ரீரியாவை ஆரோக்கியமாகப் பேணவும் உதவும்.

❖ அத்துடன் நித்திரைக் குறைபாடுகள் நீங்கவும், உடலின் நீர்த்தன்மையைப் பேணவும், குருதிக்குழாய்களின் பாதிப்புக்களைத் தடுக்கவும் உதவும்.

❖ இதில் அடங்கியுள்ள போட்டோ கெமிக்கல(Photo Chemical) Phytate ஆகியவை புற்றுநோய் வருவதை தடுக்க உதவுகின்றது.

### வரகில் தயாரிக்கப்படும் உணவுகள்

1. இட்லி
2. பொங்கல் (வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல்)
3. சாதம்
4. அதிரசம்
5. முறுக்கு
6. ஆடை
7. வடகம்
8. தோசை
9. கஞ்சி

## 04. திணை (Foxtail Millet)

இது ஆசிய உணவு வகைகளில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. பெரும்பாலும் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் சத்தான உணவுப் பொருளாகக் காணப்படுகின்றது. இது ஆசியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா, போன்ங பகுதிகளில் பயிரிடப்படுகின்றது. ஆசியாவில் குறிப்பாக இலங்கை , இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் பிரபலமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 g திணையில் உள்ள ஊட்டச்சத்துககள் கூறுகள்

| | | |
|---|---|---|
| சக்தி | - | 360 kcal |
| புரதம் | - | 10.3 g |
| மாப்பொருள் | - | 75 g |
| கொழுப்பு | - | 3.51 g |
| நார்ச்சத்து | - | 8 g |
| கல்சியம் | - | 31 mg |
| கனியுப்புக்கள் | - | 3.3 g |
| இரும்பு | - | 28 mg |
| துனின் | - | 0.8 mg |
| ரைபோ பிளேவின் | - | 0.1 mg |
| மங்கனீஸ் | - | 81 mg |
| ஐசோலியூசின் | - | 803 mg |

**திணையின் பயன்கள்**

- திணையில் புரதம் அதிகமாக காணப்படவதால் உடல் வளர்ச்சியை சீராக்க உதவும் அத்துடன் தலைமுடி ஆரோக்கியத்தை பேண உதவும்.

- கல்சியம் சத்து காணப்படவதால் உறுதியான பல் மற்றும் என்பு ஆரோக்கியத்தை பேண உதவும்.

- போதுமான அளவில் Antioxidants காணப்படுவதால் கலங்கள் வேகமாக பிரிந்து அழிவதைத் தடுத்து எப்பொதும் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் வைத்திருக்க உதவுகின்றது.

- Beta carotene ஐ கொண்டிருப்பதால் ஆரோக்கியமான கண்களுக்கும் , தோலுக்கும் ஏதுவாக அமைகின்றது.

- திணையில் உள்ள நார்ச்சத்து நிண்டநேரம் பசியின்றி நிறைவாக உணர முடிகின்றது. இதனால் உடல் எடைகுறைக்க உதவுகின்றது. அத்துடன் இவ் நார்ச்சத்தானது கர்ப்பிணிகளுக்கு ஆரோக்கியமான செரிமானத்திற்கு உதவுவதோடு கர்ப்ப காலத்தில் ஏற்படும் மலச்சிக்கல் பிரச்சனையை நீக்கும் உணவாகப் பயன்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணையில் இரும்புச்சத்து , Vit – B உட்பட பிற அத்தியாவசிய தாதுக்கள் காணப்படுவதால் தாய்க்கும் வளரும் குழந்தைக்கும் ஆரோக்கியம் தரும் உணவாக உள்ளது.

- இதில் காணப்படும் மக்னிசியம் சத்தானது ஆரோக்கியமான என்புகளையும் இதயத்தின் ஆரோக்கியத்தையும்பேண உதவுகின்றது.
- திணையில் குறைந்த கிளைசிமிக் அளவும், அதிக நார்ச்சத்தும் நீரிழிவு நோயாளிகளுக்கு நல்ல உணவுத்தேர்வாக காணப்படுகின்றது.
- நார்ச்சத்தானது இரைப்பை, சிறுகுடல், சதையி போன்ற உறுப்புக்களை வலுவூட்ட உதவுகின்றது. அத்துடன் புண்கள் எளிதில் மாறவும் உதவுகின்றது.
- இதில் உள்ள கொழுப்புசத்து குறைவாக காணப்படுவதால் குருதியில் உள்ள கொலஸ்ரோல் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவிபுரியும்.

**திணையரிசியில் தயாரிக்கப்படும் உணவுகள்**

1. கஞ்சி
2. பொங்கல்
3. உப்புமா
4. இட்லி

## 05. குதிரைவாலி (Barnyard Millet)

இது மத்திய ஆசியாவில் உருவானதாக கூறப்படுகின்றது. பின்னர் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கு ஊடுருவியதாக காணப்படுகின்றது. பொதுவாக இந்தியா, சீனா, ஜப்பான், கிழக்கு இந்தியப் பிரதேசத்தில் பயிரிடப்படுகின்றது. அத்துடன் ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா நாடுகளிலும் பயிரிடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 g குதிரைவாலி அரிசியில் உள்ள ஊட்டச்சத்து
சக்தி – 341 Kcal
புரதம் - 7.7 g
மாப்பொருள் - 67.0 g
நார்ச்சத்து – 7.6 g
இரும்பு – 9.3 g
கல்சியம் - 17 mg
பொஸ்பரஸ் - 280 mg
மற்றும் நாகம் (Zn) என்பன காணப்படுகின்றன.

**பயன்கள்**

- அதிகளவு புரதத்தைக் கொண்டிருப்பதனால் தசைகளில் உறுதிக்கு முக்கியமானது

- குருதியில் குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்திப் பேணுவதற்கு உதவும், இதனால் நீரிழிவு, உடற்பருமன் நோயாளிகளுக்கு சிறந்த உணவு.

- குருதிச்சோகை நோய் ஏற்படுவதை தடுக்க அதிகளவு இரும்புச்சத்தை கொண்டுள்ளது.

- கல்சியம், பொஸ்பரஸ் காணப்படுவதனால் என்புகளின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உதவுகின்றது.

- இதில் காணப்படும் நார்ச்சத்தானது குடலின் ஆரோக்கியத்தைப் பேண உதவுகின்றது. அத்துடன் உடல் நிறை குறைப்பதற்கும் உதவுகின்றது.

**குதிரைவாலி அரிசியில் செய்யப்படும் உணவுகள்**

1. சாம்பார் சாதம்
2. தோசை
3. தக்காளிச் சாதம்
4. உப்புமா
5. கஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. கம்பு ( **Pearl Millet** )

கம்பு ஆபிரிக்கா, தெற்காசியா, வடக்கு ஆபிரிக்கா, மேற்கு ஆபிரிக்கா ஆகியவற்றில் உருவானது. ஆபிரிக்கா, சீனா, இந்தியா ரஷ்யா போன்ற நாடுகளில் பயிரிடப்படுகின்றது.

100 g கம்பில் உள்ள போசனைக் கூறுகள்

| | |
|---|---|
| சக்தி | 378 |
| புரதம் | 11 g |
| கொழுப்பு | 4.2 g |
| காபோவைதரேற்று | 72 g |
| நார்ச்சத்து | 8.5 g |
| சர்க்கரை/குளுக்கோஸ் | 0.4 g |
| கல்சியம் | 42 mg |
| இரும்பு | 3.9 mg |
| மக்னீசியம் | 114 mg |
| பொஸ்பரஸ் | 285 mg |
| பொட்டாசியம் | 334 mg |
| சோடியம் | 5 mg |
| நாகம் | 1.9 mg |
| செப்பு | 0.8 mg |
| மங்கனீஸ் | 1.5 g |

**கம்பின் பயன்கள்**

* நீரிழிவு நோயாளிகளுக்கு நல்ல உணவு. இதில் காணப்படும் மாப்பொருள் சமிபாடடைவதற்கு நீண்ட நேரம் எடுப்பதனால் குருதியில் குளுக்கோசின் அளவு சமநிலையாக நீண்ட நேரம் காணப்படும். இதனால் மதுமேக நோயாளிகளிற்கு இது ஒரு ஆரோக்கியமான உணவாக காணப்படுகின்றது.

* glutime free உணவாக இருப்பதனால் உணவுக்கால்வாய் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் தடுக்க உதவும்.

* நார்ச்சத்து அதிகமாக இருப்பதனால் உடல் பருமனை தடுக்க உதவுகின்றது. அத்துடன் Polycstic ovarian syndram நிலை ஏற்படுவதை தடுக்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அத்துடன் உடல் உள்ளுறுப்புக்களில் தேங்கியிருக்கும் கொழுப்பைக் குறைக்க உதவும். இதனால் பெண்களின் மாதவிடாயை ஒழுங்காக்கி ஆரோக்கியமாக வாழ உதவும்.

* இதில் காணப்படும் மக்னீசியம், பொட்டாசியம் என்பன குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் ஆரோக்கியத்தைப் பேணி இருதயத்தை ஆரோக்கியமாக இருக்க உதவுகின்றது. அத்துடன் கம்பில் காணப்படும் omega 3 fatty acid, plant lignars ஆகியனவும் இருதயத்தின் ஆரோக்கியத்தை பேண உதவுகின்றது.

**கம்பு அரிசியில் தயாரிக்கும் உணவுகள்**

கம்பு தோசை
கம்பு அடை
கம்பு ரொட்டி
கம்பு களி
கஞ்சி
பிட்டு

சிறுதானியங்கள் மனித உடலுக்கு தேவையான அனைத்துவிதமான சத்ததுக்களையும் கொண்டிருப்பதால் நோயின்றி ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடன் வாழ ஒரு சிறந்த உணவாக அமைகின்றது. அத்துடன் சிறுதானியங்கள் வளர்வதற்கும் இதிலிருந்து நாம் பயனைப் பெறுவதற்கும் எடுக்கும் காலம் குறைவாக காணப்படுவதுடன் எமது நாட்டிற்கு ஏற்ப வெப்ப தட்ப சீதோஸ்ண நிலைக்கு ஈடுகொடுத்து வளரக் கூடியது. அத்துடன் நீரின் தேவைப்பாடும் சிறுதானியங்களின் செய்கைக்கு குறைவாகவே காணப்படுகின்றது. எனவே சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரித்து உடல் ஆரோக்கியத்தைப் பேணி வளமான வாழ்வை வாழ்தலே நம் மனிதப் பிறவியின் நோக்கம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்படுதல் நன்று.

Dr.ஜெ.ரத்லஜி
சமூக மருத்துவ உத்தியோகத்தர்,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினத்தைத் தவிர்ப்போம்

"தன்னைத்தான் காக்கில் சினம் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

இங்கு திருவள்ளுவர் சினத்தின் பாதிப்பை விளக்கியுள்ளார். மனிதன் சிந்தனை அறிவுடையவன் எனவே இதனிலிருந்து விடுபடவேண்டும். இதற்கான வழிகளை சிந்தித்து சிந்தித்து தெளிவுபட்டு இதனை தவிர்க்க வேண்டும்.

சினம் என்பதை கோபம், வெகுளி, குரோதம், சீற்றம், என்றும் அழைப்பர். சினம் கருவழியாக தொடர்ந்து வருகிறது. ஒருவர் சீரமைக்கப்படாத ஆசையானது செயலாகாமல் தடைப்படும்போது அத்தடையை நீக்க எழும் ஆர்வம் சினம் எனப்படும். அது உணர்ச்சி வயப்பட்ட பகை உணர்வு ஆசை தடைப்படும் போது அதைவென்றுவிட வேண்டும் என்ற வேகம் உயிர் எழுகிறது அதுவே சினமாகிறது.

மனிதன் பல நெருக்கீடுகளுக்கு மத்தியில் வாழ்கின்றான். அப்போது அவன் செய்யும் வேலைகளில் காலதாமதம் ஏற்படும் அல்லது அதனை செய்ய முடியாமல் போகும். இதனால் நாம் சினப்பட்டு பிரயோசனம் இல்லை. சினம் கொண்டு நாமும் துன்பப்பட்டு மற்றவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்கினாலும் தடைப்பட்டது நிறைவேறமாட்டாது. இதனால் பகைமைதான் வளரும். எனவே நாம் யாவருடனும் நட்புடன் வாழவேண்டும் இதனால் தான் அமைதி மகிழ்ச்சி கிடைக்கும். கோபம் வரும் போது அறிவு என்பது ஆராய்ச்சி நிலையிலோ விழிப்பு நிலையிலோ இருப்பதில்லை அவரே கோபமாக மாறுகிறார்.

"ஆபத்துகாரருக்கு புத்தி மத்திமம்" என்பர். சினத்தினால் மனிதனுக்கு கேடு விளையும், கண் சிவக்கும், நாகுழறும், முகம் அழகு கெடும், உடல் கைகள், கால்கள் நடுங்கும், இதயம் படபடக்கும், இரத்த அழுத்தம் கூடும், மனம் நடுங்கும், தன்னை மறக்கச் செய்யும், செய்வது அவருக்கே தெரிவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படபடப்பில நரம்பு பலவீனம் அடையும், உடல் சக்தி குறையும். பிறரின் வெறுப்பு சாபம் வரும் கோபம் மிகக்கூடும் போது உடல் தாங்கமுடியாது மயக்கம் வந்துவிடும். தனக்கும் பிறருக்கும் பாதிப்பு உண்டாகும் சினத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டும். தான் குடும்பம் சமுதாயம் பாதிக்கும் இச்சினத்தை பொறுமை மன்னிப்பு போன்றவற்றை நாம் வளர்த்துக்கொண்டு மாற்ற வேண்டும். இதற்கு விழிப்பு நிலையும் மனதை வளப்படுத்தும் பயிற்சிகளை நாம் பழகிக்கொள்ள வேண்டும். சினத்தை நாம் மாற்றாவிட்டால் அது வஞ்சமாக்கி பெருஅழிவைத் தந்து விடும்.

ஒருவர் சினம் அடையும் போது அவர் உணர்ச்சி நிலையில் இருப்பார் எனவே இவ்உணர்ச்சி நிலையை கட்டுப்படுத்த பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். சினத்தால் வரும் தீமைகளை உணர்ந்து பொறுமையால் வரும் நன்மைகளை எண்ணவேண்டும். இதனால் சினத்தை வெல்ல முடியும். ஒருவர் தவறு செய்யும்போது சினம் வரும் அவரை மன்னிக்கும் போது உங்கள் மனம் லேசாகின்றது. இதனால் மனம் விரிவடையும் உங்களை நட்பு வட்டங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் பல நன்மைகள் எம்மை வந்தடையும். சினத்தில் இருந்ததை விட மன்னிப்பில் மனம் லேசாவதை உணரமுடியும். எனவே மன்னிப்பு என்ற மலரை விரிய வையுங்கள். அந்த மணத்தின் மூலம் பலரையும் கவரமுடியும். மன்னிக்க தெரிந்தவனே மாமனிதனாகின்றான்.

இன்னல் புரிவோர் எதிரிகளாக நினைப்போர் எவரேனும் இருந்தால் அவர்களும் மனந்திருந்தி கருணையோடு வாழ வாழ்த்துவோம் என்று வேதாத்திரி மகரிஷி கூறியுள்ளார். எனவே அவர்களை "வாழ்க வளமுடன்" என்று தினம்தோறும் வாழ்த்த வேண்டும். அவர்கள் நல்ல நிலையில் இருக்கும்போது அவர்களுக்கு சினத்தால் ஏற்படும் தீமைகளை அன்பாகவும் அமைதியாகவும் எடுத்துச் சொல்ல வேண்டும். சினம் அதிகரிக்கும் போது சினம் கவலையாக மாறிவிடும்.

சினத்தை தவிர்ப்பதற்கு சில பயிற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். ஓய்வாக இருக்கும் போது அமைதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தை தேர்ந்தெடுத்து கொள்ள வேண்டும் கால் மணி நேரம் தவமியற்ற வேண்டும். சினம் ஏற்படும் நபர்களை பட்டியல் படுத்தி அடிக்கடி அவர்கள்மேல் சினப்பட்ட தனது தவறையுணர்ந்து இனி சினம் கொள்ளமாட்டேன் என்று சங்கல்ப்பம் செய்ய வேண்டும். சினம் வராத அளவிற்கு விழிப்பு நிலையும் உறுதியும் பெற்றுவிட வேண்டும்.

இறைவன் எப்போதும் நம்மை கண்காணித்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு நம்மிடம் இருந்தால் பிறர் மீது கோபம் கொள்ளாமல் இருப்போம் என்கிறார் தத்துவஞானி பிளேட்டோ. சினத்தை நாம் கையாள வேண்டும் சினம் நம்மை கையாளக்கூடாது.

சினம் தற்கொலைக்குச் சமன். எனவே நாம் வாழும் காலங்களில் ஔவையார் கூறியது போல ஆறுவது சினம். எனவே சினத்தை அடக்கிகொள்ள வேண்டும். அதற்காக அன்பு, கருணை, விட்டுக்கொடுத்தல், பொறுமை, புன்னகை கொண்டு சினத்தை தவிர்த்து மாமனிதனாக வாழ்வோம். இதற்கு தவம், அகத்தாய்வு, அகத்தவம் செய்து மனதை வளப்படுத்தி இன்புற்று கருணையோடு தொண்டாற்றி வாழ்வோம்.

சூழ்ந்ததெல்லாம் கடவுளெனச் சுருதி சொல்லும்
நிச்சயமாம் ஞானத்தை மறந்ததாலே
நேர்வதே மானுடர்க்குச் சினத்தீ நெஞ்சில்
(மகாகவி பாரதி)

**செல்வி நா.நீலாம்பிகை,**
நூலகர் (ஓய்வு நிலை),
தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நூலகத்தின் பகுதிகள்

பத்திரிகைப் பகுதி

⇩

டிஜிட்டல் அறிவுமையப்பகுதி

⇩

தகவல் பகுதி

⇩

இரவல் பகுதி

⇩

பருவ இதழ் பகுதி

⇩

உசாத்துணைப் பகுதி

⇩

சிறுவர் பகுதி

⇩

கல்விப் பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ashwin Printers : 0776458437